
## நபி வழியில்

# ஹஜ் - உம்ரா

## الحج والعمرة والزيارة على ضوء الكتاب والسنة

(باللغة التاملية)




எம். ஜே. எம். ரிஸ்வான் மதனி

B.A (Hons) (Madinah), M.A (Cey).

محمد رضوان بن محمد جنيد

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية بالمدينة النبوية ،

ماجستير - جامعة فيرادنيا ، سريلانكا)

# صفة الحج والعمرة والزيارة
# على ضوء الكتاب والسنة

محمد رضوان محمد جنيد

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية بالمدينة النبوية ،

ماجستير - جامعة فيرادنيا ، سريلانكا)

## நபி வழியில்

# ஹஜ் - உம்ரா

**எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி)**,

B.A (Hons) (Madinah), M.A (Cey).

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | நபி வழியில் ஹஜ் - உம்ரா |
| நூலாசிரியர் | :- | எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி) |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | :- | 180 பக்கங்கள் |
| பிரதிகள் | :- | 1500 |
| கனணி வடிவமைப்பு | :- | எம்.டீ.எம். அஸ்லம் (HND IT, B.Sc. Reading) |
| அச்சிட்டவர் | :- | எம். இஸட். முஹம்மத் |
| இரண்டாம் பதிப்பு | :- | 11 - 11 - 2022 |
| வெளியீடு | :- | ஸஹாபா பப்ளிகேஷன் |
| விலை | :- | ரூபா 600/- |

# உள்ளடக்கம்

**பக்கங்கள்**


| | | |
|---|---|---|
| | அணிந்துரை ------------------------------------------------------- | 1 |
| | முன்னுரை --------------------------------------------------------- | 3 |
| 1. | புனித கஃபாவின் புனிதத்துவமும் சிறப்பும் ---------------------------- | 7 |
| 2. | கஃபா உலகின் மத்தியில் அமைந்துள்ள இடமாகும் -------------------- | 25 |
| 3. | ஹஜ் பயணத்திற்கு முன் --------------------------------------------- | 29 |
| 4. | பிரயாண துஆக்கள் ------------------------------------------------- | 31 |
| 5. | நபி வழிமுறை பற்றி தெளிவாக அறிந்து செயற்படுதல் ------------------ | 35 |
| 6. | ஹஜ் செய்வதன் அவசியம் ------------------------------------------- | 38 |
| 7. | வருடம் தோறும் ஹஜ் செய்வது கடமையா? ------------------------- | 42 |
| 8. | உடல் பலவீனமான பெற்றோருக்கான ஹஜ் ------------------------- | 44 |
| 9. | மரணித்த பெற்றோருக்காகவும் ஹஜ் செய்யலாம் ---------------------- | 45 |
| 10. | பிறருக்காக ஹஜ், உம்றா செய்வதற்கான நிபந்தனை ------------------ | 48 |
| 11. | மஹ்ரமின்றி ஒரு பெண் தனித்தோ அல்லது பல பெண்களோடு சேர்ந்தோ ஹஜ்ஜுக்காகச் செல்ல முடியுமா? ---------------------------------- | 49 |
| 12. | மஹ்ரமின்றி தனிமையாகச் சென்று ஹஜ் செய்வதை அனுமதிப்போரின் வாதம் ------------------------------------------------------------ | 51 |
| 13. | அதீ பின் ஹாதிம் (ﷺ) அவர்களின் ஹதீஸை ஆதாரமாகக் காட்டி அனுமதிப்போருக்கான மறுப்பு-------------------------------------- | 53 |
| 14. | இஹ்ராமில் நுழைவதற்கான (மீகாத்) எல்லைகள் --------------------- | 59 |
| 15. | எல்லைகளுக்கு உட்பட்டோர் மற்றும் மக்காவாசிகளின் எல்லை --------- | 61 |
| 16. | ஹஜ் மாதங்களில் உம்றா செய்யலாம் ------------------------------ | 63 |
| 17. | ஹஜ்ஜின் வகைகள் -------------------------------------------------- | 67 |
| 18. | இஹ்ராம் அணிவதற்கு முன் செய்ய வேண்டிய காரியங்கள் -------------- | 73 |
| 19. | மனதால் நிய்யத் செய்து தல்பியாவுடன் இஹ்ராத்தில் நுழைதல் --------- | 74 |
| 20. | பயணம் தடைப்படுவதை அஞ்சினால்------------------------------ | 75 |
| 21. | பிரசவம், மாதவிடாய் ஏற்பட்ட பெண்களின் இஹ்ராம் செல்லுபடியானதாகும் ------------------------------------------- | 77 |
| 22. | மதீனாவின் எல்லை வழியாகச் செல்வோர் கவனிக்க வேண்டியது -------- | 80 |

23. மார்க்கத்தில் நல்லதுதானே என்ற வாதம் பிழையானதே! --------------- 82
24. தல்பியாக் கூறுதல் ------------------------------------------------ 86
25. இஹ்ராம் அணிந்த நிலையில் தடுக்கப்பட்டவை ----------------------- 89
26. கஃபாவில் பிரவேசிப்பது பற்றி---------------------------------------- 92
27. தவாப் செய்யும் முறை ---------------------------------------------- 97
28. புனித கஃபா தொடர்பாகக் கூறப்படும் கற்பனைக் கதைகள் -------------- 101
29. கஃபாவின் பின்வரும் படத்தை அவதானிக்கவும் ---------------------- 104
30. பெண்கள் படுவதால் வுழூ முறியுமா? -------------------------------- 108
31. தவாஃப் முடிந்ததும் ---------------------------------------------- 111
32. உம்றாவின் கடமைகள் பற்றிய சுருக்கம் ----------------------------- 117
33. 'தமத்துஃ' முறையில் ஹஜ் செய்பவர் கவனத்திற்கு --------------------- 118
34. இஹ்ராம், தவாஃப், ஸஃய் ஆகிய கடமைகளில் இடம்பெறும்
சுன்னத்துக்கள் --------------------------------------------------- 122
35. இரண்டு உம்றாக்கள் தொடர்பான விளக்கம் ------------------------- 124
36. துல் ஹஜ் எட்டாம் நாள் ------------------------------------------ 127
37. துல் ஹஜ் ஒன்பதாம் நாள் ---------------------------------------- 128
38. பகல் வேளைகளில் அரஃபா தவறிவிட்டால் -------------------------- 134
39. துல் ஹஜ் ஒன்பதாம் நாள் சூரிய அஸ்தமனத்தின் பின் ---------------- 136
40. இயலாத பெண்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே கல்லெறியச்
செல்லலாம் ------------------------------------------------------- 138
41. பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பது தடையாகும் ------------------ 140
42. துல் ஹஜ் பத்தாம் நாள் செய்யப்படும் அமல்கள் --------------------- 141
43. குர்பானி, ஹத்ய், ஃபித்யா -------------------------------------------148
44. துல் ஹஜ் 11, 12, 13 ஆம் நாட்கள் --------------------------------- 151
45. அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் நோன்பு நோற்கலாமா? ---------------- 154
46. துல் ஹஜ் 12 ஆம் நாள் மாலை சூரியன் மறைந்துவிட்டால் ----------- 156
47. தாயிஃப் நகரமும் அதற்கான பயணமும் ------------------------------ 159
48. தாயிஃப் செல்வது அனுமதியே அன்றி நபிவழி கிடையாது -------------- 162
49. இரண்டாவது உம்ரா பற்றி இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள்---- 165
50. ஸியாரத் பற்றிய விளக்கம் ---------------------------------------- 167
51. ஹஜ்ஜை முடித்து நாடு திரும்பும் போது ------------------------------ 173
முடிவுரை ------------------------------------------------------------ 175
உசாத்துணைகள் ------------------------------------------------------ 176

# அணிந்துரை

الحمد لله رب العالمين والصلاة، والسلام على رسوله المبعوث رحمة للعالمين وعلى آله وصحبه أجمعين وبعد.

ஒரு முஃமினின் எந்த ஒரு வணக்கமும் இறை திருப்தியையும், கூடவே இறை அங்கீகாரத்தையும் இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு வணக்கம் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட முக்கிய இரு நிபந்தனைகள் அதில் உள்ளடங்கி இருப்பது அவசியமாகும்.

1) இறை திருப்தியை நோக்கமாகக் கொண்டு உளத்-தூய்மையோடு செய்தல். (இக்லாஸ்),
2) குறித்த வணக்கத்தை இறைத் தூதரைப் பின் பற்றி மேற்கொள்ளுதல். (இத்திபா)

இவ்விரண்டு நிபந்தனைகளுமோ அல்லது அவ்விரண்டில் ஒன்றோ ஒரு வணக்கத்தில் இல்லாது போகும் போது அது அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதில்லை.

இறைத் தூதர் முஹம்மது (ﷺ) அவர்கள் தன்னை ஹஜ் செய்யக் கண்ட முறைப்படி அதனை நிறைவேற்றுமாறு தனது தோழர்களைப் பணித்திருந்தார்கள் என்பதை புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல ஹதீஸ் கிரந்தங்களில் காண முடிகின்றது.

இரு பெரும் ஆன்மீக வணக்கங்களான ஹஜ்ஜும், உம்ராவும் நிறையப் பொருளாதாரங்கள் செலவு செய்து சிரமத்தோடு மேற்கொள்ளப்படுகின்ற வணக்கங்களாகும்.

பல்வேறுபட்ட கஷ்டங்கள், சிமரங்கள் மத்தியில் நிறையப்படுகின்ற மேற்படி வணக்கங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படல் வேண்டும் என்ற போதிய அறிவு இன்மையினால் பலர் அதன் நூறுவித பலனை இழக்கும் நிலைக்குச் செல்வது துரதிஷ்டமாகும் .

அந்தக் குறையை நிவர்த்திக்கும் உயர்ந்த நோக்கில் நபிவழியில் ”ஹஜ், உம்ரா வழிகாட்டி” என்ற நூலை நண்பர் அஷ்ஷைக் எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி MA. (pera) அவர்கள் குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், இமாம்களின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுத்திருப்பது மகிழ்ச்சி-யளிக்கின்றது.

பன்னூல் ஆசிரியரும், ஆழமான இஸ்லாமிய அறிவுப் பின்னணியும், பலதடவைகள் ஹஜ், உம்ரா செய்த அனுபவமும் கொண்ட ஷேக் ரிஸ்வான் மதனியால் இந்நூல் எழுதப்பட்டிருப்பது அதன் சிறப்பம்சமாகும்.

தமிழ் பேசும் சமூகத்திற்கு அவசியமானதும் காலத்திற்கு தேவை-யானதுமான ஒரு முயற்சியாகவே இதனைக் காண்கின்றேன்.

இந்நூல் ஹஜ், உம்ராவிற்காக செல்கின்ற சகோதர, சகோதரிகள் கட்டாயம் படித்துப் பயன் பெற வேண்டிய நூலாகும்.

சகோதரர் ரிஸ்வான் மதனியின் இந்தப் பணியை அல்லாஹ் அங்கீகரித்து அருள் செய்வதோடு, அவருக்கு சிறந்த தேக ஆரோக்கியத்தையும் வழங்குவானாக என அவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

கலாநிதி
**எம். எல். முபாரக் மதனி** Ph.D.
பணிப்பாளர்,
தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி, மருதமுனை.
10.10.2022



# முன்னுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானது. அவனது அருளும் சாந்தியும் நபிகள் நாயகம் முஹம்மது ﷺ அவர்கள் மீதும், அவர்களின் வழிநடந்த நபித்தோழர்கள், இமாம்கள், உலக முஸ்லிம்கள் அனைவர் மீதும் உண்டாகுவதோடு, மண்ணறைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சகோதர, சகோதரிகள் அனைவர் மீதும் நிலையாக உண்டாகட்டுமாக!

புனித ஹஜ் கடமையினை நிறைவேற்ற இருக்கும் சகோதரர்களே! அர்ஷின் இரட்சகன், அகிலங்களின் அதிபதி, அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைவாக இறை நேசர் என்ற சிறப்புப் பெயருக்குச் சொந்தக்காரரான நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் புனித கஃபாவைக் கட்டி முடித்ததோடு விடுத்த அழைப்பிற்கு பதிலளிக்க அல்லாஹ் அருள் செய்த பயணமாக இப்பயணம் இருக்கின்றது.

எனவே, அவரது அந்த அழைப்பை அல்லாஹ்வின் நாட்டத்தால் ஏற்று, நீங்கள் உங்கள் வியர்வை சிந்தி, சிரமப்பட்டு பல ஆண்டுகள் சேமித்த பல இலட்சம் ரூபாய்களை சில நாட்களில் செலவு செய்வதன் மூலம் உலகிலேயே முதல் இறை இல்லமான புனித கஃபாவிற்கு ஹஜ்ஜுக்காகச் செல்லும் பாக்கியத்தைப் பெற்றுள்ளீர்கள். (அல்ஹம்து லில்லாஹ்).

இந்நிலையில் உங்கள் 'ஹஜ்' வணக்கம் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணக்கமாக இருக்கவும் அப்புனித இல்லத்தில் நீங்கள் எமக்காக பிரார்த்திக்கவும் முடியுமான அளவு முயற்சிகள் செய்து, புனித அல்குர்ஆன் மற்றும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், ஷரீஆத் துறைசார் இமாம்களின் தெளிவுரைகள் ஆகியவற்றில் இருந்து ஹஜ், உம்றா, ஸியாரத் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கிய இந் நூலை இரண்டாம் பதிப்பாக வெளிடுகின்றோம்.

வாழ்வில் ஒரே ஒருதடவை மாத்திரம் ஹஜ் செய்த இறுதி இறைத்தூதர் பாசத்திற்குரிய முஹம்மது நபி (ﷺ) அவர்கள் தனது தோழர்களுக்கு 'ஹஜ்' வணக்கம் தொடர்பான அடிப்படை வழிகாட்டல்கள் அனைத்தையும் மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் கற்றுத்தந்திருப்பதை அவர்களின் தோழர்கள் மூலம் அறிவிக்கப்படுவதை கண்ணியத்திற்குரிய இமாம்கள் பதிவு செய்துள்ளதைப் படிக்கின்ற போது உண்மையில் ஆச்சரியமாக உள்ளது. அவ்வளவு விரிவும், விசாலமும், நெகிழ்வும் கொண்ட விளக்கமாக அவை திகழ்கின்றன.

ஹஜ், உம்ரா மற்றும் அவற்றுடன் தொடர்பான ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹுத் துறை சார்ந்த இமாம்களால் தொகுத்தளிக்கப்பட்டுள்ள விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எந்த மத்ஹபும் சாராது நபிவழியில் ஹஜ், உம்றா, ஸியாரா பற்றிய விளக்கங்கள் -இறையருளால்- இந்நூலில் முன் வைக்கப்படுகின்றன.

நாம் எடுத்துக் கூறும் கருத்துக்கள் சில வேளை மத்ஹப் சார்ந்த அல்லது மரபு மற்றும் பாரம்பரிய வழியில் மார்க்கத்தைப் பின்பற்றும் நமது அருமைச் சகோதரர்களுக்கு ஆச்சரியத்தை தந்தாலும் இந்நூலில் உண்மைக்குப் புறம்பானவைகளோ அல்லது இஸ்லாத்திற்கு முரணான செய்திகளோ கிடையாது என்று நாம் சாட்சியம் கூறுகின்றோம்.

இந்நூலில் காணப்படும் செய்திகள் நாமறிந்தவரை அல்குர்ஆனுக்கும், ஆதாரபூர்வமான நபிவழிக்கும் உடன்பட்டவையாகும். அவற்றையே இங்கு நம்மால் தொகுக்கப்பட்டுள்ளதாக நாம் காண்கின்றோம் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகின்றோம்.

ஆகவே, இதில் உள்ளவற்றை நீங்கள் மிகக் கவனமாகவும், நிதானமாகவும் படியுங்கள். அதில் ஆதாரமற்றவை என உங்களால் சரியான ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்படுபவை –இன்ஷா அல்லாஹ்– மூன்றாம் பதிப்பில் திருத்திக் கொள்ளப்படும்.

ஹஜ் முகவர்களால் பிரசுரிக்கப்படும் பல நூல்களில் காணப்படும் ஆதாரமற்ற, மார்க்கத்திற்கு நேர்முரணான மாபெரும் தவறுகளோ, அல்லது வெறுக்கப்பட்ட பித்அத்தான திக்ர், துஆக்களோ அல்லாஹ்வின் உதவியால் இதில் இருக்கவே முடியாது என்பதை எம்மால் உறுதியாகக் கூற முடியும்.

பல சிரமங்களுக்கு மத்தியில் நீங்கள் மேற்கொள்கின்ற உங்களின் "ஹஜ்" அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட, இறைத் தூதர் வழியில் அமைந்த ஹஜ்ஜாக மாற வேண்டும் என்பது நமது ஆழ்மனதில் வேரூன்றிய எண்ணமாகும்.

அல்லாஹ்வின் அருளினால் இந்நூலின் முதலாம் பதிப்பு பல அமைப்பினரதும், ஜமாஅத்தினரதும் மதிப்பையும் துஆவையும் பெற்ற காரணத்தினால் மீண்டும் பலரது பிரார்த்தனையை தேடிக் கொள்ளும் நோக்குடன் அதிகப் படியான செய்திகளோடு இரண்டாவது பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

இந்நூல் ஆரம்பகால மற்றும் நவீனகால பல அறிஞர்களின் நூல்களின் துணை கொண்டே தொகுக்கப்பட்டுள்ளது. இதில் ஹதீஸ்களின் இறுதியில் தரப்படும் இலக்கம் ஷாமிலாமின் நூலக இலக்கமாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இதைப் படித்து அமுல் செய்யும் பாக்கியம் பெறும் நீங்கள் ஹஜ்ஜின் இறுதியில் இதன் நன்மைகள் பற்றி உரையாடுவீர்கள். அல்லாஹ்விடம் எமக்காக நிச்சயம் பிரார்த்தனையும் செய்வீர்கள். அதையே நாமும் உங்களிடம் எதிர் பார்க்கின்றோம். அல்லாஹ் நம்மனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

இறுதியாக...

இந்நூல் வெளிவர பூரண உடல் ஆரோக்கியத்தையும் அருள்பாக்கியத்தையும் மார்க்க விளக்கத்தையும் எனக்கு வழங்கிய அல்லாஹ்வைப் புகழ்கின்றேன். மேலும், எனக்கு அறிவைப் போதித்த எனது ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்குமாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வது போன்று கற்றல், கற்பித்தல், தஃவா என அனைத்துக்கும் எனக்கு எல்லா வகையிலும் உதவியாகவும் பக்க பலமாகவும், துணையாகவும் இருக்கின்ற பாசமிகு எனது மனைவி மக்கள், மற்றும் நண்பர்கள், ஊக்கமளித்தோர் அனைவரையும் பிரார்த்தனைகளில் இணைத்துக் கொள்கின்றேன்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி அஷ்ஷைக் எம். எல். முபாரக் மதனி Ph.D. அவர்களுக்கும், இந்நூல் வெளிவர தட்டச்சுப் பணியில் உதவிய நண்பர் எம்.டீ.எம். அஸ்லம் (HND IT, B.Sc. Reading), அதன் பக்கங்களில் படங்கள் இணைத்து அழகிய முறையில் வடிவமைத்து அச்சிட உதவிய வெலிகம, எம்.இசட். முஹம்மது, தமிழ் பிழைகள் திருத்த உதவிய ஏ.எல்.ஏ. ஸலாம் ஆசிரியர், நண்பர்களான மடவளை ரஸீன் அக்பர் மதனி மற்றும் மீள்வாசிப்பில் உதவிய அப்துர் ரஹீம் அக்பர் நளீமி, ஓட்டமாவடி, அந்நூர் அகடமி க.பொ.த. உயர்தரப் பிரிவு மாணவன் என்.எம். நிஃப்லான் ஆகியோர் முக்கிய பங்காளிகளாவர். அல்லாஹ் அவர்களுக்கும் ஈருலகிலும் அருள் புரிவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

இவண்:-
**எம். ஜே. எம். ரீஸ்வான் மதனி M.A. (Cey)**
**E-mail: rizwanmadani71@yahoo.com**




# புனித கஃபாவின் புனிதத்துவமும் சிறப்பும்

புனித “ஹஜ்” கடமையினை மேற்கொள்ளும் செல்வந்தப் பெருமக்கள் புனித மக்கா மண்ணின் புனிதத்துவம், அதன் வரலாற்றுப் பின்னணி பற்றி அறிவதால் தாம் கஷ்டப்பட்டு திரட்டிய செல்வம் இவ்வளவு புனிதமிக்க தளங்களில் அகில இரட்சகனாகிய அல்லாஹ்வை வணங்கி வழிபடவும் அவன் செய்த நன்றிகளை நினைவு கூர்ந்து தியானிக்கவும், அவன் திருப்தியை நாடியும் செலவு செய்யப்படுவதையிட்டு கவலை கொள்ளாது அகமகிழ்வடைய வேண்டும் என்ற நோக்கில் கஃபாவின் புனிதம் பற்றிக் இங்கு சுருக்கமாக விவரிக்கப் படுகின்றது.

இது ஹாஜிகள் தமது பொருளாதாரம் எவ்வளவு தூரம் தூய வழியில் திரட்டியதாக இருக்க வேண்டும் என்று தம்மைப் பற்றி சுய பரிசோதனை செய்ய வழிவகுக்கும் என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. எனவேதான் இங்கு மக்காவின் புனிதத்துவம் பற்றி சுருக்கமாக எழுதப்படுகின்றது.

## அல்லாஹ்வால் புனிதமாக்கப்படுதல்:

உலகில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள், அவற்றைப் பின்பற்றும் மனித சிந்தனைகளில் இருந்து வெளிப்படுகின்ற கற்பனைக் கதைகளால் அவற்றைப்

பாதுகாக்க முயற்சிக்கப்படுவது போன்று, உலகில் அது வழக் கொழிந்து செல்லாதிருக்க அவை சார்ந்த அரசுகளாலும் மதப் போதகர்களாலும் தொல்லியல், புராதனம் என்ற பெயர்களால் அவை புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்படுகின்றன.

அவ்வாறு அறிமுகம் செய்யப்படும் பிரதேசங்களில் மனித சமூகத்தின் சீரழிவின் பிரதான செயற்பாடுகள் என வர்ணிக்கப் படும் மது, பாலியல் துஷ்பிரயோகங்கள், விபச்சாரம், கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்ற சமூகச் சீரழிவுகளைத் தடுக்க எவ்வித வரையறைகளும் விதிக்கப்படுவதில்லை. மாற்றமாக அவைகள் அங்கு தாராளமாக அரங்கேற்றப்படுகின்றன.

இஸ்லாத்தில் புனிதப் பிரதேச பிரகடனமும், அவற்றின் நெறிமுறை இயல்புகளும், அங்கு கடைப்பிடிக்க வேண்டிய உயரிய வழிமுறைகளும், மேற்படி மத சித்தாந்த வரையறை களில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

புனித மக்காவின் புனிதத்துவம் என்பது அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வினால் வானங்கள், பூமி படைக்கப் பட்ட போதே பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் பிரகடனம் செய்யப்பட்டதாகும் என்பது இஸ்லாமிய நம்பிக்கையாகும்.

உலகில் எந்த ஒரு சட்டமானாலும் அது எந்த இடத்தில் இருந்து பிறப்பிக்கப்படுகின்றது என்பதை கவனத்தில் கொண்டுதான் அதன் பெறுமானமும், மதிப்பும் அந்தஸ்தும் மக்கள் மனங்களில் வித்தியாசப்படுகின்றன, கண்ணியம் பெறுகின்றன.

அந்த அடிப்படையில் மக்காவின் புனிதத்துவத்தை நோக்குவோமாயின், மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த உயர்ந்த அர்ஷின் இரட்சகனாகிய அல்லாஹ்வினால் அது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இது மாத்திரம் அதன் புனிதத்துவத்தை பறைசாட்டப் போதுமான சான்றாகும். இதனை பின்வரும் நபிமொழி உறுதி செய்கின்றது.

عَنْ أَبِي شُرَيْحٍ أَنَّهُ قَالَ لِعَمْرِو بْنِ سَعِيدٍ وَهُوَ يَبْعَثُ الْبُعُوثَ إِلَى مَكَّةَ ائْذَنْ لِي أَيُّهَا الْأَمِيرُ أُحَدِّثْكَ قَوْلًا قَامَ بِهِ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْغَدَ مِنْ يَوْمِ الْفَتْحِ سَمِعَتْهُ أُذُنَايَ وَوَعَاهُ قَلْبِي وَأَبْصَرَتْهُ عَيْنَايَ حِينَ تَكَلَّمَ بِهِ حَمِدَ اللهَ وَأَثْنَى عَلَيْهِ ثُمَّ قَالَ إِنَّ مَكَّةَ حَرَّمَهَا اللهُ وَلَمْ يُحَرِّمْهَا النَّاسُ (متفق عليه)

உமையா ஆட்சியில் மதீனாவின் கவர்னராக இருந்த அம்ர் பின் ஸயீத் (அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) அவர்களுடன் போர் செய்வதற்காக) மக்காவிற்கு படைகளை அனுப்ப முடிவு செய்த போது நபித்தோழர் அபூஷுரைஹ் (ﷺ) அவர்கள், அமீர் அவர்களே! மக்கா வெற்றி கிடைத்த மறு தினம் நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறிய செய்தியினை நான் அறிவிப்பதற்கு கொஞ்சம் எனக்கு உத்தரவு தாருங்கள் என வேண்டிக் கொண்ட பின்னர், எனது இருசெவிகளும் அதனை செவிமடுத்தன, எனது இதயம் அதனை பதிந்து கொண்டது, எனது இரு கண்களும் அவர்கள் பேசிய போது பார்த்தன எனக் கூறிவிட்டு நபி (ﷺ) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்த பின்;

“நிச்சயமாக மக்காவை அல்லாஹ்வே புனிதப்படுத்தினான். மனிதர்கள் அதனைப் புனிதப்படுத்தவில்லை. எனக் கூறினார்கள். (என மக்காவுடன் தொடர்புடைய நீண்ட ஹதீஸை அறிவித்தார்கள். (நூல் புகாரி, முஸ்லிம்)

## ஹதீஸ் அறிவிக்கப்பட்டதன் பின்னணி :

முஆவியா (ﷺ) அவர்களின் மரணத்தின் பின் அவர்களது மகன் (யஸீத் என்பவர் ஆட்சியில் அமர்ந்தார். அவருக்கு மக்கள் “பைஅத்” செய்தனர். ஆனால் ஹுஸைன்

(ﷺ) அவர்களும் அப்துல்லா பின் சுபைர் (ﷺ) அவர்களும் அவருக்கு “பைஅத்” தர மறுத்து விட்டனர். அது மட்டுமின்றி, அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) பிரிந்து மக்காவில் தனியாட்சி செய்து கொண்டிருந்தார்கள். ஹுஸைன் (ﷺ) அவர்கள் கூஃபா சென்றார்கள். அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) அவர்கள் பைஅத் தர மறுத்தால் அவர்களுக்கு எதிராக போராடுவதற்காக அவர்களின் உடன்பிறந்த சகோதரர் அம்றுபின் சுபைர் என்பவரின் தலைமையின் கீழ் மதீனாவின் கவர்னராக இருந்த “அம்ர் பின் ஸயீத்” என்பவர் மக்காவிற்கு பெரும் படையை அனுப்பினார்.

‘ஆயிதுல் பைத்’ (عائذ لبيت) (கஃபாவில் பாதுகாப்பு வேண்டி தஞ்சம் புகுந்தவர்) என்ற பெயருக்குச் சொந்தக் காரரான அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ﷺ) அவர்கள் மக்காவில் தஞ்சம் புகுந்திருந்தார்கள். அவர்களுடன் போர் செய்வது கவர்னர் அம்ருடைய படையின் நோக்கமாக இருந்தது. அதனால் நபித்தோழர் அபூஷுரைஹ் (ﷺ) அவர்கள் இந்த நபி மொழியை அம்ர் அவர்களிடம் (உரிய நேரத்தில்) எடுத்துக் கூறினார்கள். (நூல்: ஃபத்ஹுல்பாரி)

இந்த நபி மொழியில் மக்காவின் புனிதம் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருப்பதையும் இப்புனித வீட்டில் நல்லறம் செய் வதற்குப் பதிலாகக் கொலை, கொள்ளை போன்ற தீய செயல்களில் ஈடுபடுவோர், அல்லாஹ்வினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள புனிதத் தன்மைக்கு மாசு கற்பித்தவராக கணிக்கப்படுவர் என்பதில் ஐயமில்லை என்பதையும் அறியலாம். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

**ஐயம்:**

நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப் படுத்தியதாக புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் பின்வரும் செய்தி மேற்படி ஹதீஸுக்கு முரண் இல்லையா?

إِنَّ إِبْرَاهِيمَ حَرَّمَ مَكَّةَ وَدَعَا لأَهْلِهَا وَإِنِّى حَرَّمْتُ الْمَدِينَةَ كَمَا حَرَّمَ إِبْرَاهِيمُ مَكَّةَ وَإِنِّى دَعَوْتُ فِى صَاعِهَا وَمُدِّهَا بِمِثْلَىْ مَا دَعَا بِهِ إِبْرَاهِيمُ لأَهْلِ مَكَّةَ .

(أخرجه مسلم : ٣٣٧٩)

பொருள்:

"யா அல்லாஹ் நிச்சயமாக (துந்தை) இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப் பிரகடனம் செய்து அதற்காக பிரார்த்தனையும் செய்தார்கள். இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப்படுத்தி அதற்காக பிரார்த்தனை செய்தது போன்று நானும் மதீனாவைப் புனிதப்படுத்தி அதன் "முத்து, மற்றும் "ஸாஃ" என்ற அளவு நிறுவையிலும் (பரகத் வேண்டி) இப்ராஹீம் நபி (ﷺ) அவர்கள் பிரார்த்தனை செய்ததை விட இரு மடங்குகள் வேண்டிப் பிரார்த்தனை செய்துள்ளேன் என நபிகள் நாயகம் (عليه السلام) அவர்கள் கூறினார்கள்.

(நூல்: முஸ்லிம்)

புகாரி போன்ற ஹதீஸ் நூல்களில் தபூக் சென்று திரும்பிய இறைத்தூதர் அவர்களுக்கு உஹத் மலை தென்பட்டது. அப்போது இந்த மலை நம்மை நேசிக்கின்றது. நாமும் அதனை நேசிக்கின்றோம் எனக் கூறி விட்டு மேற்படி பிரகடனத்தைக் கூறியதாக இடம் பெற்றுள்ளது.

இது முரண்பாடு போலுள்ளதே! மக்காவை அல்லாஹ் புனிதமாக்கியதாகக் கூறப்படுகின்றது. இங்கு இப்ராஹீம் நபி அவர்கள் பிரகடனம் செய்ததாக வந்துள்ளது. எனவே, இது முரண்பாடாச்சே! இந்த முரண்பாட்டை எவ்வாறு நீக்கலாம் என்ற கேள்வி உங்களிடம் எழலாம்.

**சந்தேக நிவர்த்தி:**

இந்த நபி மொழிக்கும் மேலே உள்ள நபி மொழிக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லை. மேலே உள்ள நபி மொழி பிரகடனத்தின் ஆரம்பத்தையும் அதன் பிறப்பிடத்தையும் குறிப்பிடுகின்றது.

இந்த நபி மொழி இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்களால் உலகில் அது மீண்டும் புனிதப் பிரகடனம் செய்யப்பட வேண்டிய நேரத்தில் செய்யப்பட்டதை உணர்த்துகிறது என்று விளங்கலாம்.

அல்லது வானங்களும் பூமியும் படைக்கப்பட்ட தினம் முதல் அல்லாஹ்வால் மக்கா நகரம் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதை இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்கள் கஃபாவின் புனருத்தாபனப் பணிகள் முடிந்ததும் அல்லாஹ் வின் கட்டளைப்படி மீண்டும் புதுப்பித்தார்கள் என்றும் மதீனாவின் புனிதப் பிரதேசப் பிரகடனம் இறுதித் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது என்றும் விளங்கலாம். (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்)

**குறிப்பு:**

“முத்து” என்பது நடுத்தர மனிதர் ஒருவர் தனது இரு சிறங்கையினாலும் நான்கு தடவைகள் அள்ளி எடுக்கும் அளவாகும். நவீன கால அளவின்படி, 510 கிராம்களாகும். ஒரு “ஸாஃ” என்பது நான்கு முத்துகளாகும். நவீன கணிப்பு முறையில் ஒரு சாவு என்பது மூன்று கி. கிராம் என்று பலரும் இரண்டு கி. கிராமும் 750 கிராம் என சிலரும், இரண்டு கிலோவும் 450 அல்லது 500 கிரேமும் என மற்றும் சிலரும் குறிப்பிடுகின்றனர்.

**வானம், பூமி படைக்கப்பட்ட நாள் முதல் புனிதமாக்கப்பட்ட பிரதேசம்:**

வானமும் பூமியும் படைக்கப்பட்ட நாள் முதல் புனித மக்கா நகரின் புனிதத்துவமும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ فَتْحِ مَكَّةَ : "لَا هِجْرَةَ وَلَكِنْ جِهَادٌ وَنِيَّةٌ وَإِذَا اسْتُنْفِرْتُمْ فَانْفِرُوا وَقَالَ يَوْمَ

فَتْحِ مَكَّةَ إِنَّ هَذَا الْبَلَدَ حَرَّمَهُ اللهُ يَوْمَ خَلَقَ السَّمَوَاتِ وَالْأَرْضَ فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ ..." (متفق عليه)

மக்கா வெற்றி கிடைத்த மறு தினமே இறைத்தூதர் அவர்கள் தனது உரையில் மார்க்கத்தின்படி வாழ "ஹிஜ்ரத்" நாடு துறத்தல் என்பது இனி இல்லை. அறவழிப் போரும் அதற்கான "நிய்யத்" (எண்ணமு)மே நிலையானது. போருக்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நீங்கள் புறப்படுங்கள். எனக் கூறி விட்டு அதே தினத்தில் "நிச்சயமாக இந்தப் பிரதேசத்தின் வானங்களையும் பூமியையும் படைத்த தினத்திலேயே அல்லாஹ் புனிதமாக்கிவிட்டான். அல்லாஹ் வுடைய அந்தப் புனிதப்படுத்தலின் அடிப்படையில் மறுமை நாள் வரையும் அது புனிதமானதாகும் என அறிவிப்புச் செய்ததாக இப்னு அப்பாஸ் (﵁) அவர்கள் அறிவிக்கிறார்கள்).
(நூல்: புகாரி , முஸ்லிம்)

## உலகின் முதல் ஆலயம் :

புனித கஃபா மனிதர்கள் அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்தி, இணைவைக்காது வணங்கிட பூமியில் அமைக்கப்பட்ட அல்லாஹ்வின் முதலாவது இல்லமாகும்.

إِنَّ أَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِي بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِّلْعَالَمِينَ ﴿٩٦﴾ (آل عمران:٩٦)

"மனிதர்களுக்காக முதலாவது நிறுவப்பட்ட (முதன்மை ஆலயம்) பக்கா (மக்கா)வில் உள்ள வீடாகும். (அது) அருள் பாக்கியம் செய்யப்பட்டதாகவும், அகிலத்தாருக்கான நேர் வழிகாட்டியாகவும் இருக்கின்றது." (ஆலுஇம்ரான் : 96)

புனித மக்கா உலகின் முதலாவது ஆலயம் மாத்திர மின்றி, உலக மக்களின் வழிகாட்டியும் என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஒரு இடத்தை தரிசிக்கக் கிடைப்பது பெரும் பாக்கியமாகும். அதுவும் அருள்பாலிக்கப்பட்டதாக இருப்பது அந்த இடத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

இந்த இடம் பாரம்பரிய, புராதன சரித்திரம் வாய்ந்தது என்பதை உணர்த்தவே அங்கு இப்ராஹீம் (عليه السلام) அவர்களின் பாதம் பட்ட இடம் (மகாமு இப்ராஹீம்) இருப்பதாக அல்குர்ஆன் தொடர்ந்தும் குறிப்பிட்டு ஹஜ் கடமையில் உள்ளார்ந்த அடிப்படையில் ஈடுபட ஆர்வமூட்டி அது பற்றி உணர்த்து-கின்றது.

فِيهِ ءَايَٰتٌۢ بَيِّنَٰتٌ مَّقَامُ إِبْرَٰهِيمَ ۖ وَمَن دَخَلَهُۥ كَانَ ءَامِنًا ۗ وَلِلَّهِ عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلْبَيْتِ مَنِ ٱسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَن كَفَرَ فَإِنَّ ٱللَّهَ غَنِىٌّ عَنِ ٱلْعَٰلَمِينَ ﴿٩٧﴾ (آل عمران: ٩٧)

“அதில் தெளிவான அத்தாட்சிகள் இருக்கின்றன. மகாமு இப்ராஹீம் என்பது (அதில் ஒன்றாகும்). அங்கு பிரவேசித்தவர் பாதுகாப்புப் பெற்றவராகிவிடுகின்றார். அல்லாஹ்வுக்காக அந்த வீட்டைச் சென்றடைய ஆற்றல் பெற்ற மனிதர்கள் அதில் ஹஜ் செய்வது அவர்கள் மீதுள்ள கடமையாகும். யார் அதை நிராகரிக்கின்றானோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவை அற்றவனாகும்.”

(ஆலுஇம்ரான்: 97)

மேற்படி வசனம் ஹஜ்ஜின் கடமையை அதன் முதல் பகுதியிலும், அதைப் புறக்கணிப்பதால் ஹஜ் கடமையான முஸ்லிம்கள் நஷ்டவாளர்கள் என்று அதன் இறுதியிலும் கூறி எச்சரிக்கை விடுக்கின்றது.

புனித மஸ்ஜிதுல் ஹராம் உலகில் முதலாவது இறை இல்லம் என்பதை பின்வரும் நபிமொழியிலும் காணலாம்.

عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللهِ أَيُّ مَسْجِدٍ وُضِعَ أَوَّلَ ؟ قَالَ: الْمَسْجِدُ الْحَرَامُ ، قُلْتُ ثُمَّ أَيٌّ ؟ قَالَ : ثُمَّ الْمَسْجِدُ الْأَقْصَى ، قُلْتُ كَمْ كَانَ بَيْنَهُمَا ؟ قَالَ : أَرْبَعُونَ ، ثُمَّ قَالَ : "حَيْثُمَا أَدْرَكَتْكَ الصَّلَاةُ فَصَلِّ وَالْأَرْضُ لَكَ مَسْجِدٌ" . (أخرجه البخاري : ٣٤٢٥)

அபூதர் அல்கிஃபாரி (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதரே! பூமியில் முதன் முதலாக நிறுவப்பட்ட ஆலயம் எது என நான் கேட்டேன். அதற்கு “அல்மஸ்ஜிதுல் ஹராம்” என பதிளித்தார்கள். பின்பு எது எனக் கேட்டேன். (பாலஸ்தீன) “அல்மஸ்ஜிதுல் அக்ஸா” எனக் கூறினார்கள். அவை இரண்டிற்கும் இடைப்பட்ட (கால) அளவு எவ்வளவு என்று கேட்டேன். நாற்பது என்றார்கள். பின்னர், “தொழுகை உன்னை எங்கிருந்து அடைந்து கொண்டாலும் நீ கட்டாயமாகத் தொழுது கொள். பூமி உனக்கு பள்ளியாகும் எனக் கூறினார்கள்.

(நூல் : புகாரி).

**சந்தேக நிவர்த்தி:**

நபி சுலைமான் (عليه السلام) அவர்களே பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலை முதல் முதலில் கட்டியதாக நம்மில் சிலர் விளங்கி வைத்துள்ளோம். உண்மையில் அதனை ஆரம்ப அடித்தலமிட்டுக் கட்டியவர் நபி யஃகூப் (عليه السلام) அவர்களாகும்.

இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்கள் கஃபாவை எவ்வாறு புணர் நிர்மாணம் செய்தார்களோ அவ்வாறு சுலைமான் நபி (عليه السلام) அவர்களும் அதனை ஜின்களைக் கொண்டு புணர் நிர்மாணம் செய்தார்கள் என்பதே யதார்த்தமாகும்.

இவர்கள் இருவருக்கும் இடைப்பட்ட கால அளவு கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் என இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் மூலம் முன்வைக்கப்படுவதாக இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) தனது “ஸாதுல் மஆத்” எனும் நூலில் குறிப்பிடுள்ளார்கள்.

**மறுமை நாள் வரை தொழுகைக்கான திசையாகும்:**

கஃபாவிற்கு முன்னால் அல்லது நேர் எதிரில் இருப்போர் தொழுகையை நிறைவு செய்கின்ற போது

நேரடியாக நோக்கப்பட வேண்டிய திசையாகவும் அதை விட்டும் தொலைவில் இருப்போர் அதன் திசையை நோக்க வேண்டிய ஒரு மசூதியாகவும் அது விளங்குகின்றது.

عَنِ الْبَرَاءِ بْنِ عَازِبٍ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ أَوَّلَ مَا قَدِمَ الْمَدِينَةَ نَزَلَ عَلَى أَجْدَادِهِ أَوْ قَالَ أَخْوَالِهِ مِنْ الْأَنْصَارِ ، وَأَنَّهُ صَلَّى قِبَلَ بَيْتِ الْمَقْدِسِ سِتَّةَ عَشَرَ شَهْرًا أَوْ سَبْعَةَ عَشَرَ شَهْرًا ، وَكَانَ يُعْجِبُهُ أَنْ تَكُونَ قِبْلَتُهُ قِبَلَ الْبَيْتِ ، وَأَنَّهُ صَلَّى أَوَّلَ صَلَاةٍ صَلَّاهَا صَلَاةَ الْعَصْرِ ، وَصَلَّى مَعَهُ قَوْمٌ ، فَخَرَجَ رَجُلٌ مِمَّنْ صَلَّى مَعَهُ ، فَمَرَّ عَلَى أَهْلِ مَسْجِدٍ وَهُمْ رَاكِعُونَ ، فَقَالَ: أَشْهَدُ بِاللهِ لَقَدْ صَلَّيْتُ مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قِبَلَ مَكَّةَ ، فَدَارُوا كَمَا هُمْ قِبَلَ الْبَيْتِ ، وَكَانَتْ الْيَهُودُ قَدْ أَعْجَبَهُمْ إِذْ كَانَ يُصَلِّي قِبَلَ بَيْتِ الْمَقْدِسِ وَأَهْلُ الْكِتَابِ ، فَلَمَّا وَلَّى وَجْهَهُ قِبَلَ الْبَيْتِ أَنْكَرُوا ذَلِكَ .

(أخرجه البخاري برقم: ٤٠ الشاملة)

நபி (ﷺ) அவர்கள் மதீனாவிற்கு வந்த ஆரம்ப காலத்தில் அன்ஸாரிகளான அவர்களின் முப்பாட்டனார்களிடம் அல்லது அவர்களின் (தாய்வழி) மாமாமார்களிடம் தங்கினார்கள். அவர்கள் பதினாறு அல்லது பதினேழு மாதங்கள் பைதுல் மக்திஸ் பக்கமாக தொழுது வந்தார்கள். புனித வீட்டின் (கஃபாவின்) பக்கமாக அவர்களது கிப்லா அமைந்திருப்பது அவர்களுக்கு ஒரு மனப்பிடிப்பாக இருந்தது. (அது பிற் காலத்தில் நிறைவேறியது). (கிப்லா மாற்றப்பட்ட பின்னர்) அவர்கள் ஆரம்பமாக அஸர் தொழுகையை தொழுதிருந்தார் கள். அவர்களுடன் அவர்களின் தோழர்களில் ஒரு சாராரும் தொழுதனர். ஒரு மஸ்ஜிதில் மக்கள் ருகூவில் இருந்து கொண்டிருந்த போது அவர்களில் ஒருவர் أَشْهَدُ بِاللهِ அல்லாஹ் வை சாட்சியாளனாக்கிக் கூறுகின்றேன். “நான் நபி (ﷺ) அவர்களுடன் மக்காவை நோக்கி தொழுதேன்” என முழங்கினார். அவர்கள் இருந்த நிலையில் அந்த வீட்டை

(கஃபாவை) நோக்கி அப்படியே சுழன்று திரும்பினர். இந்த நிகழ்வு முன்னர் நபி (ﷺ) அவர்களும் வேதம் கொடுக்கப் பட்டோரும் பைத்துல் மக்திஸ் நோக்கித் தொழுது வந்தது யூதர்களுக்கு பெரும் வியப்பைக் கொடுத்தது. அவர்கள் கஃபாவை நோக்கியதும் அதனை அவர்கள் வெறுத்தனர்.

(நூல்: புகாரி)

இதன் மூலம் உலக முஸ்லிம்கள் தமது தொழுகையின் போது இறுதி நாள்வரை நோக்க வேண்டிய புனித இல்லமாக புனித கஃபா இறை இல்லம் விளங்குவதை அறியலாம்.

## மல சலம் கழிக்கின்ற போது கிப்லாத் திசையை நோக்குவதைத் தவிர்த்தல்:

عَنْ أَبِي أَيُّوبَ الْأَنْصَارِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: "إِذَا أَتَى أَحَدُكُمْ الْغَائِطَ فَلَا يَسْتَقْبِلِ الْقِبْلَةَ وَلَا يُوَلِّهَا ظَهْرَهُ شَرِّقُوا أَوْ غَرِّبُوا" . (أخرجه البخاري برقم : ١٤١ الشاملة)

“மல, சலம் கழிப்பதற்காக உங்களில் யாராவது வந்தால் அவர் கஃபாவின் திசையை முன் நோக்கவோ அல்லது அவரது முதுகை அதற்கு பின் நோக்கிக் காட்டியோ இருக்க வேண்டாம். கிழக்கு மேற்காக அமர்ந்து கொள்ளுங்கள்” என அல்லாஹ்வின் தூதர் நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளதாக அபூஅய்யூபுல் அன்ஸாரி (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

**குறிப்பு:** இது மேற்குத் திசையாக கிப்லாவை முன் நோக்கும் நம் போன்றவர்களுக்குக் கூறப்பட்டது கிடையாது. மாறாக மதீனா மக்கள்தான் கிழக்கு மேற்காக அமர வேண்டும். அதனால் இது மதீனா வாசிகளுக்கு சொல்லப்பட்டதாகும். நாம் கிழக்கு மேற்காக அமர்வதனால் மேற்படி அறிவுரையைப் பின்பற்ற வேண்டியதில்லை. பின்வரும் ஹதீஸையும் இணைத்து விளங்கவும்.

عَنْ سَلْمَانَ، قَالَ: قِيلَ لَهُ: قَدْ عَلَّمَكُمْ نَبِيُّكُمْ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كُلَّ شَيْءٍ حَتَّى الْخِرَاءَةَ قَالَ: فَقَالَ: أَجَلْ «لَقَدْ نَهَانَا أَنْ نَسْتَقْبِلَ الْقِبْلَةَ لِغَائِطٍ، أَوْ بَوْلٍ،

(أخرجه مسلم ٢٦٢)

நபித்தோழர் ஸல்மான் (﵁) அவர்களிடம் ஒரு மனிதர் உங்கள் நபி (ﷺ) அவர்கள் அற்பமான (மல சல) ஒழுங்கைக் கூட கற்றுத் தந்துள்ளார்களே! என (ஆச்சரியமாக) வினவிய போது ஆம் உண்மைதான். மல சலம் கழிக்கின்ற போது கிப்லாத்திசையை முன்னோக்குவதை எமது நபியவர்கள் தடை செய்துள்ளார்கள்; என பதிலளித்தார்கள்.

(நூல்: முஸ்லிம்)

பாலைவனம் போன்ற திறந்த வெளிகளில் கஃபாவின் திசையை நோக்கியவாறு ஒருவர் மல சலம் கழிப்பது தடை செய்யப்பட்டிருப்பதையே இது குறிக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். அதன் திசை நோக்கி மல சலம் கூட கழிப்பது தடை என்பதைக் கவனித்தால் அதன் புனிதத்துவம் எவ்வளவு பெறுமானம் உடையது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

அது மாத்திரமின்றி, அங்குள்ள மரங்கள், செடி-கொடிகள், புற்பூண்டுகளைக் கூட வீணாக வெட்டுவதும், அங்கு வாழும் பறவைகள், மிருக இனங்களுக்கு இடையூறு விளைவிப்பதும் ஹராமாகும்.

**மக்காவினுள் போர் செய்வது மறுமைநாள் வரை தடை:**

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ فَتْحِ مَكَّةَ... : "إِنَّ هَذَا الْبَلَدَ حَرَّمَهُ اللهُ يَوْمَ خَلَقَ السَّمَوَاتِ وَالْأَرْضَ ، فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ ، وَإِنَّهُ لَمْ يَحِلَّ الْقِتَالُ فِيهِ لِأَحَدٍ قَبْلِي ، وَلَمْ يَحِلَّ لِي إِلَّا سَاعَةً مِنْ نَهَارٍ ، فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ

(أخرجه البخاري : ٣٣٨٩)

இந்தப் பிரதேசமானது வானங்கள், மற்றும் பூமி படைக்கப்பட்ட நாளில் அல்லாஹ் புனிதத்துவப்படுத்தியதாகும். அது அல்லாஹ் புனிதமாக்கியதன் அடிப்படையில் மறுமை வரை புனிதமானதாகும். அங்கு எனக்கு முன்னர் யாருக்கும் போர் செய்ய அனுமதிக்கப்படவில்லை. எனக்கும் கூட (குறிப்பிட்ட) சில மணி நேரங்களே சலுகையளிக்கப்பட்டது. எனவே அல்லாஹ்வின் புனிதத்துவத்தின் அடிப்படையில் மறுமை வரையும் அது புனிதமானதாகும் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் மக்கா வெற்றி பெற்ற அதிகாலை கூறினார்கள்.
(நூல்: புகாரி)

ஒரு பிரதேசம் புனிதமானது என்பதை விளக்கிட அதற்குரிய பாதுகாப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றும் மக்கா உலகிலேயே பாதுகாப்பு நிறைந்த பிரதேசமாக இருப்பது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

### தஜ்ஜால் பிரவேசிக்க முடியாத வானவர்கள் பாதுகாப்பு வலயம்

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لَيْسَ مِنْ بَلَدٍ إِلَّا سَيَطَؤُهُ الدَّجَّالُ إِلَّا مَكَّةَ وَالْمَدِينَةَ ، لَيْسَ لَهُ مِنْ نِقَابِهَا نَقْبٌ إِلَّا عَلَيْهِ الْمَلَائِكَةُ صَافِّينَ يَحْرُسُونَهَا ، ثُمَّ تَرْجُفُ الْمَدِينَةُ بِأَهْلِهَا ثَلَاثَ رَجَفَاتٍ ، فَيُخْرِجُ اللهُ كُلَّ كَافِرٍ وَمُنَافِقٍ" .

(أخرجه البخاري -١٧٨٤،١٤٧٤، ومسلم -٥٢٣٦)

தஜ்ஜால் உலகில் எல்லா பிரதேசங்களுக்குள்ளும் உட்பிரவேசிப்பான். ஆனால் மக்கா, மதீனா ஆகிய இரு புனித நகரங்களுக்குள்ளும் அவனால் செல்ல முடியாதவாறு அதன் சந்து பொந்துகள் எல்லாம் வானவர்கள் அணியணியாக அப்பிரதேசங்களைப் பாதுகாத்த வண்ணம் நிற்பார்கள். பின்னர் மதீனாவில் மூன்று முறை நிலநடுக்கம் ஏற்படும். அதனால்

(அங்குள்ள) ஒவ்வொரு காஃபிரையும், நயவஞ்சகனையும் அல்லாஹ் வெளியேற்றுவான் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

## நன்மை நாடி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட உலகின் முக்கிய மூன்று புனித மஸ்ஜிதுகளில் ஒன்று

நன்மை நாடி பணத்தை செலவு செய்து, மூட்டை முடிச்சு களோடு பயணம் மேற்கொள்ள உலகில் அனுமதிக்கப்பட்ட பிரதேசமாக இந்த மக்கா பிரதேசமும் விளங்குகின்றது.

قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَا تَشُدُّوا الرِّحَالَ إِلَّا إِلَى ثَلَاثَةِ مَسَاجِدَ ، مَسْجِدِي هَذَا ، وَالْمَسْجِدِ الْحَرَامِ ، وَالْمَسْجِدِ الْأَقْصَى" .

(أخرجه البخاري)

கட்டுச்சாதனங்களைக் கட்டிக் கொண்டு மூன்று பள்ளிகள் தவிர்ந்த ஏனைய பள்ளிகளுக்கு (நன்மை நாடி) பயணம் மேற்கொள்வது கூடாது எனக் கூறிய இறைத்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள், எனது இந்தப் பள்ளி, (மஸ்ஜித் நபவி) அல்மஸ்ஜிதுல் ஹராம் (மக்காப் பள்ளி) அல்மஸ்ஜிதுல் அக்ஸா (பலஸ்தீன் பள்ளி) என்பனவே பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டதாகும் எனத் தெளிவுபடுத்திக் கூறினார்கள். (புகாரி)

இப்படிப்பட்ட சிறப்புக்களை உள்ளடக்கிய பள்ளி அமைந்துள்ள இடமாகிய புனித மக்கா பிரதேசத்திலும் அதனைச் சுற்றி உள்ள புனித இடங்களிலும்தான் ஹஜ், மற்றும் உம்ராவின் கடமைகள் நிறைவு செய்யப்படுகின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

## இப்ராஹீம் (عليه السلام) அவர்களும் புனித மக்கா நகரும்

உலகில் புனித கஃபாவை முதலாவது கட்டியது யார் என்ற வரலாற்றுத் தொடர்பான கேள்விக்கு வானவர்கள், பின்னர் ஆதம் நபி (عليه السلام) அவர்கள் என்றும் இஸ்லாமிய வரலாற்றில் பதிலளிக்கப்படுகின்றது.

இருப்பினும், அதன் வரலாறு இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்களோடும் அவர்களின் இரண்டாம் மனைவி ஹாஜி(ஜ)ர் அவர்களின் மகன் இஸ்மாயீல் (عليه السلام) அவர்களோடும் தொடர்பு படுத்தியே அதிகம் பேசப்படுவது. பிரபல்யம் அடைந்துள்ளது.

புனித ஹஜ் கடமைக்கும் இப்ராஹீம் (عليه السلام) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களான ஹாஜிர், மற்றும் அவர்களின் புதல்வர் இஸ்மாயீல் (عليه السلام) ஆகியோருக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு காணப்படுவதை வருடந் தோறும் நிறைவேற்றப்படும் ஹஜ் கால கடமைகள் உணர்த்தி நிற்கின்றன.

ஸம்ஸம் நீர், ஹஜ், உம்ராவின் போது ஸஃபா மர்வா ஆகியவற்றுக்கு இடையில் ஓடப்படும் ஸஃய், ஜம்ராத்தில் கல்லெறிதல், உழ்ஹிய்யாக் கடமை போன்ற இன்னோரன்ன பல கிரிகைகள் இந்தக் குடும்பத்தினை நினைவுபடுத்திய வண்ணம் இருக்கின்றன.

خليل الرحمن அல்லது خليل الله அல்லாஹ்வின் நேசர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது குழந்தை இஸ்மாயீலையும் அவரது இரண்டாம் மனைவி ஹாஜிர் (رضي الله عنها) அவர்களையும் அல்லாஹ்வின் கட்டளைக்கு முழுமையாக அடிபணிந்து மனித சஞ்சாரமற்ற புனித மக்கா பள்ளத்தாக்கில் விட்டுப் பிரிகிறார்கள். அதன் பின்னால் தொடர்ந்து அவர்கள் வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகள்தாம் இவ்வளவு பாரிய ஆச்சரியமிக்க சரித்திரங்களைப் படைத்துள்ளன எனக் கூற முடியும் .

இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது குடும்பத்தை விட்டுப் பிரியும் வேளையும் சரி, அல்லது பிரிவின் பின் தனது அன்பு மகன் இஸ்மாயீலை சந்திப்பதற்காக வந்த போதும் சரி புனித மக்காவிற்காக பல ஆசீர்வாதப் பிரார்த்தனைகளைச் செய்துள்ளார்கள்.

மக்காவின் கனி வர்க்கங்கள் மற்றும் உணவு வகைகள் போன்றவற்றின் இறை அபிவிருத்திக்காக அவர்கள் பிரார்த்தனை செய்திருப்பதன் மூலம் மனித வாழ்வின் முதுகெலும்பாகக் காணப்படும் பொருளாதார உற்பத்தியின் அவசியம் பற்றி அவர்களின் வரலாறு பின்வருமாறு உணர்த்துகின்றது.

رَّبَّنَآ إِنِّيٓ أَسۡكَنتُ مِن ذُرِّيَّتِي بِوَادٍ غَيۡرِ ذِي زَرۡعٍ عِندَ بَيۡتِكَ ٱلۡمُحَرَّمِ رَبَّنَا لِيُقِيمُواْ ٱلصَّلَوٰةَ فَٱجۡعَلۡ أَفۡـِٔدَةٗ مِّنَ ٱلنَّاسِ تَهۡوِيٓ إِلَيۡهِمۡ وَٱرۡزُقۡهُم مِّنَ ٱلثَّمَرَٰتِ لَعَلَّهُمۡ يَشۡكُرُونَ ﴿٣٧﴾ [إبراهيم : ٣٧]

“எங்கள் இரட்சகனே! சங்கை மிக்க உனது வீடு அமைந்துள்ள, புற்பூண்டுகள் இல்லாத ஒரு பள்ளத்தாக்கில் நிச்சயமாக நான் எனது சந்ததியினரை குடியமர்த்திவிட்டேன். எங்கள் இரட்சகனே! அவர்கள் தொழுகையை நிலைநிறுத்த (பாக்கியமளிப்பாயாக), மனிதர்களில் சிலரது உள்ளங்களை அவர்கள் பக்கம் சாயக் கூடியதாக ஆக்குவாயாக! அவர்கள் நன்றியுடையோராக இருக்கும் பொருட்டு அவர்களுக்கு பழ வர்க்கங்களை நீ உணவு ஆகாரமாக அளிப்பாயாக!” (இப்ராஹீம்: 37-41) வரையான வசனங்கள் இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மேற் கொண்ட பிரார்த்தனைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

மேற்படி பிரார்த்தனைகளின் பிரதிபலனாக காலம் காலமாக புனித மக்காவில் எப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை நபிமொழிகளும் இஸ்லாமிய வரலாறுகளும் தெளிவாக விளக்குகின்றன.

இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது மகனுடன் இணைந்து புனித கஃபாவைப் புணர் நிர்மாணம் செய்தமை, ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுத்தமை போன்ற அம்சங்கள் அதன் ஒரு பகுதியாகும்.

அவர்கள் புனித கஃபாவை தனது மகன் இஸ்மாயீலுடன் கட்டி முடித்ததும் அல்லாஹ் அவர்களுக்கு பின்வருமாறு கட்டளையிட்டான்.

وَإِذْ بَوَّأْنَا لِإِبْرَٰهِيمَ مَكَانَ ٱلْبَيْتِ أَن لَّا تُشْرِكْ بِى شَيْـًٔا وَطَهِّرْ بَيْتِىَ لِلطَّآئِفِينَ وَٱلْقَآئِمِينَ وَٱلرُّكَّعِ ٱلسُّجُودِ ﴿٢٦﴾ وَأَذِّن فِى ٱلنَّاسِ بِٱلْحَجِّ يَأْتُوكَ رِجَالًا وَعَلَىٰ كُلِّ ضَامِرٍ يَأْتِينَ مِن كُلِّ فَجٍّ عَمِيقٍ ﴿٢٧﴾

(الحج: ٢٦، ٢٧)

அந்த இறை இல்லத்தின் இடத்தை இப்ராஹீமுக்கு நாம் மிகத் துல்லியமாகக் காண்பித்தோம். அத்துடன் எனக்கு எதையும் இணையாக்கக் கூடாது என்றும், தவாஃப் செய்வோர், நின்று வணங்குவோர், றுகூஃ, சுஜூதில் ஈடுபடுவோர் அனைவருக்குமாக எனது வீட்டை (இணைவைப்பு, பாவங்கள் ஆகிய வற்றில் இருந்து) பரிசுத்தப்படுத்துவீராக என்றும் (கட்டளையிட்டோம்). மேலும் ஹஜ்ஜுக்காக மக்களுக்கு அழைப்பு விடுப்பீராக அவர்கள் நடையாகவும் மெலிந்த ஒட்டகைகளின் மீது ஏறிப் பயணம் செய்தும் உலகின் திக்குச் திசைகளில் இருந்தெல்லாம் வருவார்கள் (என்றோம்.)”

(அல்ஹஜ்: 26, 27)

இங்கு எனது இல்லத்தில் தவாஃப் செய்வோர், நின்று வணங்குவோர், ருகூஃ, மற்றும் சுஜூத் செய்வோர் என அல்லாஹ்வுடன் இணைத்து “எனது இல்லம்” எனக் கூறப் பட்டுள்ளதன் மூலம் அல்லாஹ்வின் இல்லம் என்ற சிறப்பைப் பெற்ற புனிதமிக்கதோர் இடத்தில் ஹஜ் மற்றும் உம்ராக் கடமைகள் நிறைவேற்றப்படுவது கண்டு நமது இறையச்சம் மேலும் அதிகரிக்க வேண்டும்.

மட்டுமன்றி, அல்லாஹ் பரிசுத்தமானவன், அவனது இல்லமும் பரிசுத்தமானது, அவனை வணங்கி வழிபடும் நாம் அவனுக்கு இணை வைக்காத இறை நேசர்களை அழைத்து

பிரார்த்திக்காத, அல்லாஹ்வை மட்டும் அழைக்கும் பரிசுத் தமான மக்களாகவும் இருக்க வேண்டும் என்பது நேரடியாகவும் மறைமுகமாகவும் இங்கு உணர்த்தப்படுகின்றது.

இறை நேசரான இப்றாஹீம் (عليه السلام) அவர்களே அல்லாஹ்விடம் நேரடியாகப் பிரார்த்தனை செய்துள்ள நிலையில் நாமும் அவ்வாறு செய்வதே மார்க்கமாகும்.

அல்லாஹ்வை வணங்கும் இடம் எவ்வாறு பரிசுத்தமாக இருக்க வேண்டுமோ, அதே போன்று அல்லாஹ்வைத் தூய்மையாக வணங்குதல், அவனே வணங்கி வழிபடத் தகுதியானவன் போன்ற வழிபாட்டுக் கோட்பாடுகள் மூலம் அவனைத் தூய்மைப்படுத்தி, கலப்பற்ற முறையில் வணங்கு வதும் மனிதர்கள் மீது விதியாக்கப்பட்ட கடமையாகும்.

அந்தத் தூய கோட்பாட்டு முறையானது பிறரைக் கடவுள் நிலையில் வைத்தோ அல்லது அவர்களை இடைத் தரகர்களாக ஆக்கியோ அதன் தூய்மை சிதைக்கப்பட்டு மனிதர்கள் செய்கின்ற வணக்கமும் பாழாகிவிடும் என்பதனாலேயே கஃபாவினுள் காணப்பட்ட நூஹ் நபி கால நல்லடியார்களின் சிலைகளும், வேறு விக்கிரகங்களும் மக்கா வெற்றியின் போது நபி (ﷺ) அவர்களினால் அகற்றப்பட்டன.

இறுதியில் இணை வைப்பாளர்கள் கலக்காத தூய வழிபாட்டுத் தளமாகவும் புனித கஃபா மாற்றப்பட்ட பின்னரே நபி (ﷺ) அவர்கள் அங்கு ஹஜ் கடமையினை நிறைவு செய்துள் ளார்கள். இவை அனைத்தும் வணக்கத்தில் தூய்மையின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.



## 02

# கஃபா உலகின் மத்தியில் அமைந்துள்ள இடமாகும்

புனித கஃபா உலகின் மையப் பகுதியில் அமைந்திருப்பது பற்றி ஆரம்பகால மேற்கத்தைய ஆய்வுகள் குறிப்பிடா விட்டாலும் முஸ்லிம் அறிஞர்கள் பலர் அது பற்றிக் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை.

ஒருவர் வான், தரை மற்றும் வாகனம் அல்லது நடை மார்க்கமாக எந்த வழியாக மக்கா நகர் நோக்கி வந்தாலும் அவர் மிக எளிய முறையில் வந்து சேர்வதற்குரியதாக அதன் படைப்பாளனாகிய அல்லாஹ் அதற்கான வழிகளை ஆக்கி வைத்திருக்கின்றான்.

நவீன ஆய்வுகளின் பிரகாரம் உலகில் உள்ள முதல் கண்டங்களான ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் உள்ள ஒன்பது பிரதான நகரங்களும் ஒன்பது தீவுகளும் விஞ்ஞானிகளால் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் இருந்து மக்காவிற்கான தூரம் அளவிடப்பட்டது. அப்போது அதன் தூரம் 8039 கி.மீ. என ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

பின்னர் கண்டறியப்பட்ட கண்டமான அவுஸ்திரேலியாவின் கிழக்காக அமைந்துள்ள நியூசிலாந்தின் வெலிங்டன் நகரத்தில் இருந்து மக்காவுக்கான தூரம் 13040 கி.மீ. களாகவும் தென் அமெரிக்காவின் கோடியில் இருக்கின்ற

நகரமான கொரன் ஹோரன் நகரத்திற்கும் மக்காவிற்கும் இடைப்பட்ட தூரம் 13120 கி.மீ. களாகவும் கண்டறியப்பட்டது.

அவ்வாறே, வட அமெரிக்காவின் கோடியில் இருக்கும் வட அலஸ்காவிற்கும் மக்காவிற்கும் இடைப்பட்ட தூரம் 13600. கி.மீ. களாகவும் கண்டறியப்பட்டன.

இவ்வாறு பார்க்கின்ற போது உலக மக்கள் எந்தக் கண்டத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் மக்காவை வந்து சேர ஒன்று 8039 கி.மீ. கள் தூரமோ, அல்லது 13600 கி.மீ. கள் தூரமோ மொத்தமாகப் பயணம் செய்ய வேண்டும்.

அதே வேளை, இந்த கண்டங்களின் ஒரு கோடியில் ஹஜ்ஜுக்கான பயணம் இருக்குமானால் அதைவிடப் பன்மடங்கு தொலை தூரம் மக்கள் பயணம் செய்ய நேரிடும். அதனால் மக்கள் கடுமையான அவதிக்குள்ளாவர் என்பதில் சந்தேகம் இல்லை.

இது மக்கா உலகின் மத்தியில் இருப்பதையும் அது உலக மக்கள் அனைவரும் பெரிய அளவான சிரமங்கள் இன்றி அங்கு வந்து சேர்வதற்கான கடல், தரை, வான் வழிகளையும் அல்லாஹ் இலகுபடுத்தியிருப்பதையும் உணர்த்துகின்றன.

ஆகவே, மக்கா உலக வரைபடத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என எந்த திசையின் கோடியிலும் இல்லை. மாறாக, அது உலகத்தின் மையப் புள்ளியாகவே விளங்குகின்றது என்பதையும் எம்மால் உறுதி செய்ய முடியும். இதன் காரணமாகவே உண்மையில் உலக நேர அளவை மக்காவில் இருந்தே வரையறை செய்ய வேண்டும். கிரீன் வீச் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை போன்ற கருத்துக்கள் உலகில் தற்போது வலுப்பெற்று வருகின்றன.

பூமிப் பந்தானது முட்டை, உருண்டை வடிவிலானது என விஞ்ஞானிகள் முடிவிற்கு வந்த பின்னர் இந்த பூமியின் ஒரு பகுதியை ஒரு நாளின் தொடக்கமாகக் கொள்ள முடிவு செய்தனர்.

அதன் முடிவாக 1882ம் ஆண்டு லண்டனில் உள்ள கிரீன்வீச் நகரம் பிரித்தானிய ஆளுகையில் இருந்த போது கிரீன் வீச் நகரை அடிப்படையாகக் கொண்டு நாளின் ஆரம்பம் நிர்ணயம் செய்யப்பட்ட சர்வதேச தேதிக் (கிரீன்விச்) கோட்டைத் தொடக்கும் நகரமாக அந்த நகரைப் பிரகடனப்படுத்தினர். அதனால் அதற்கு கிரீன்வீச் நேரம் என்ற பெயரும் வந்தது.

இருந்தாலும் புனித மக்காவை மையப்படுத்தியதாக உலக நேர சூசியை மாற்றி அமைக்க வேண்டும் என ஆய்வாளர் அர்னோல்ட் கேஸர்லின்ங் போன்றவர்கள் குறிப்பிடுவதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.


الموسوعة الميسرة فى الإعجاز العلمى شحاته صقر

உலக வரைபடத்தில் உலகின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனித ஆலயமான இந்த இல்லம் நோக்கி உலகின் எந்த திசையில் இருந்து மக்கள் வந்தாலும் கிட்டத்தட்ட ஒரே அளவான தூரத்தையே அவர்களின் பயண தூரம் எட்டும் விதமாக அமைந்துள்ளதன் மூலம் அல்லாஹ்வின் அடியார்கள் தமது கடமைகளை உலகில் சிரமம் இன்றி மேற்கொள்ள சம நிலை பேணப்பட்டுள்ளதையும் இங்கு கவனிக்க வேண்டும். இது இந்த புனித இல்லத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

அப்படியானால் நாம் எப்படியான பிரதேசத்தில் ஹஜ், மற்றும் உம்ரா போன்ற புனித கடமைகளை நிறைவேற்றச் செல்கின்றோம் என்பதை உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

"எனது வீடு" என்று அல்லாஹ் சிறப்பித்துக் குறிப் பிடுகின்ற புனிதம் நிறைந்த கஃபாவின் பராமரிப்பை அவனுடைய நேசர் என அறிவிக்கப்பட்ட இறைத்தூதர் இப்ராஹீம் (عليه السلام) அவர்களிடம் ஒப்படைத்து அதனை இணைவைத்தல், மார்க்க விரோத செயற்பாடுகள் போன்ற பாவமான, தீய காரியங்கள் எதுவும் இல்லாத புனித வீடாகவும் பரிசுத்தப்படுத்திய பின்னர், ஹஜ்ஜை நிறைவேற்ற அழைப்பு விடுக்க பணிக்கின்றான் என்றால் நாம் நமது வணக் கங்களிலும் நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் எவ்வளவு தூயவர்களாக இருக்க வேண்டும்? அந்தக் கட்டளை, நாம் நமது வாழ்வில் கடுகளவும் அல்லாஹ்வுக்கு இணை வைத்துவிடக் கூடாது என்பதை நமக்கு உணர்த்த வில்லையா?

உலகிலேயே புனிதமிக்க இல்லமான புனித கஃபாவைக் கட்டி முடித்து மக்களை ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுத்தவர் ஒரு நபியும் இறை நேசரும் ஆவார். அவரிடமே இணைவைப்பு செய்யக் கூடாது என்ற உறுதி மொழி இந்த சந்தர்ப்பத்திலும் பெறப்பட்டுள்ளது என்றால் இணை வைப்பின் விபரீதம் பற்றி உதாசீனப்படுத்தும் பல அழைப்பாளர்கள் தமது அழைப்புப் பணியில் காணப்படும் பாரிய குறைபாட்டை இது சுட்டிக்காட்டவில்லையா?






# 03 ஹஜ் பயணத்திற்கு முன்

**பணம் தூயவழியில் பெறப்பட்டதா? என சுயபரிசோதனை செய்தல்**

தூய முறையில் பெறப்பட்ட பணத்திலேயே “ஹஜ்” செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருட்பாக்கியம் பெற்ற மக்களைத் தவிர ஏனையோர் இந்த விஷயத்தில் தமது பொருளீட்டல் முறை பற்றி தம்மைப் பரிசோதிக்க வேண்டியவர்களே!

தவறான வழியில் ஈட்டிய பொருளாதாரம் நமது வணக்கத்தை மாத்திரமல்ல, நமது மறுமை வாழ்வையும் நாம் வேண்டும் பிரார்த்தனைகளையும் கூட அழித்துவிடும் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் போதனையாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : «أَيُّهَا النَّاسُ إِنَّ اللهَ طَيِّبٌ ، لاَ يَقْبَلُ إِلاَّ طَيِّبًا ، وَإِنَّ اللهَ أَمَرَ الْمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِينَ ، فَقَالَ ( يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنَ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا إِنِّي بِمَا تَعْمَلُونَ عَلِيمٌ) وَقَالَ (يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ) ». ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ : يَا رَبِّ يَا رَبِّ، وَمَطْعَمُهُ حَرَامٌ ، وَمَشْرَبُهُ حَرَامٌ ، وَمَلْبَسُهُ حَرَامٌ ، وَغُذِىَ بِالْحَرَامِ ، فَأَنَّى يُسْتَجَابُ لِذَلِكَ؟ ». (أخرجه مسلم: ٢٣٩٣)

நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்த மானவை களைத் தவிர வேறு எதையும் அவன் ஏற்றுக் கொள்வதில்லை. நிச்சயமாக அல்லாஹ் தனது தூதர்களுக்கு கட்டளை இட்டவை களையே இறை நம்பிக்கையாளர்களுக்கும் கட்டளையிட் டுள்ளான். "தூதர்களே! பரிசுத்தமானவைகளையே உண்ணு-ங்கள், மேலும் நல்லமல் செய்யுங்கள்" என்றும், "நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கியதில் பரிசுத்தமானவைகளையே உண்ணுங்கள் என்றும் அவன் கூறுகின்றான்" எனக் கூறிய இறைத் தூதர் அவர்கள் ஒரு மனிதன் பற்றிக் குறிப்பிடும் போது அவன் தலைவிரி கோல மாகவும், தனது பாதங்களில் தூசு படிந்தவனாகவும் நீண்ட பயணம் செய்கின்றான். (கஷ்டத்தின் போது) தனது இரு கரங்களையும் வானின் பக்கமாக உயர்த்தி, (கஷ்டம் நீங்கிட) எனது இரட்சகனே! எனது இரட்சகனே! என அழைத்துப் பிரார்த்தனையும் செய்கின்றான். ஆனால், அவனது உணவு ஹராம், குடித்த பானமும் ஹராம், அவனது ஆடையும் ஹராம், ஹராமாகவே அவனது உடம்பு வளர்க்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவனுக்கு பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக் கப்படும் என நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள்." (முஸ்லிம்)

பிற மனிதர்களிடம் சுரண்டப்பட்ட பணங்கள் அவர்களிடம் மீட்டப்படல் வேண்டும். அநீதி இழைக்கப்பட்டோரிடம் மன்னிப்புக் கோரப்படல் வேண்டும், இனியும் இவ்வாறான பாவங்கள் பக்கம் மீள்வதில்லை என சம்மந்தப்பட்டவர்கள் உறுதியாக நம்ப வேண்டும். இல்லையேல் குளிக்கப் போய் சேறு பூசிய கதை யாகவே ஹஜ் பயணம் மாறும். (அல்லாஹ்தான் நம் அனைவரையும் பாதுகாக்க வேண்டும்.)

### அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுதல்:

அமல்கள் புரிகின்ற இறை நம்பிக்கையாளர்களிடம் 'இக்லாஸ்' என்ற தூய எண்ணம் மேலோங்கிக் காணப்படுவது

அவசியமாகும். ஒரு வணக்கம் நிறைவேற 'இக்லாஸ்', - மனத்தூய்மை, 'இத்திபாஃ' –இறைத்தூதர் வழிப் பிரகாரம் அமைத்தல் ஆகிய இரண்டு நிபந்தனைகளில் இக்லாஸை வணக்கங்களில் நிலை நிறுத்திக் கொள்ள 'ரியா' (முகஸ்துதி) வுடன் போராடும் விசுவாசி ஒருவர் வணக்கங்களில் பொதுவாக எதிர் கொள்ளும் மிகப் பெரும் சோதனைகளில் ஒன்று எனக் கூற முடியும்.

அவன் தனது சிறிய மற்றும் பெரிய அமல்கள் எது வானாலும் அவற்றை அல்லாஹ்வுக்காக செய்வதாக எண்ணிச் செயலாற்ற வேண்டுமேயன்றி, அவற்றை பிறருக்காக செய்வதாகக் கனவிலும் எண்ணக்கூடாது.

ஹாஜியார், ஹாஜி, ஹாஜிம்மா, ஹாஜியானி, அல்ஹாஜ் போன்ற நாமங்கள் சமுதாயத்தில் பவனி வருவதைப் பார்த்தால் வணக்கங்களின் நன்மைகளை அழிக்கின்ற முதல் நிலையில் புனித 'ஹஜ்' ஆகிவிட்டதோ என எண்ணத்தோன்றும் அளவுக்கு நிலைமை தலைகீழாக மாறி இருக்கின்றது. இது ஹாஜிகளின் முகஸ்துதியின் யதார்த்த நிலையைப் புடம் போட்டுக் காட்டுகின்றது.

ஹாஜிகள் தமது மனக் குரோதங்களைக் களைவதற் காக வீடுவீடாகச் சென்று மன்னிப்புக்கோரும் போதும், பள்ளி களில் ஹஜ்ஜுக்கான முஸாபஹா, முஆனகா செய்கின்ற போதும் தற்பெருமை அற்றவர்களாக இருப்பார்களா? என்பது நியாயமான சந்தேகமே.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளால் 'ரியா' என்ற முகஸ்துதி உருவெடுக்குமாக இருந்தால் அவற்றைத் தவிர்த்து தொழுகைக்குச் செல்வது போன்று செல்வதே ஏற்றமானதாகும்.

இருப்பினும் தமது தவறுகளுக்காக பொது மக்கள் மன்றில் மன்னிப்புக் கோருகின்ற ஒரு அம்சம் நடந்தேறு கின்றது என்றால் அதனை நாம் விமர்சனம் செய்யவும்

முடியாது. தான் யாருக்காவது தவறிழைத்திருப்பின் நபி மொழியில் வந்திருப்பது போன்று அதனை சம்மந்தப்பட்ட வர்களோடு மாத்திரம் முடித்துக் கொள்ளவும் வேண்டும்.

“ஹஜ்” மற்றும் “உம்ரா” பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆன்

وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ ..... ﴿١٩٦﴾ (البقرة : ١٩٦)

“ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக முழுமைப்படுத்துங்கள்” (அல் பகரா: 196) என்று குறிப்பிடு கின்றது. ஒருவர் இக்கடமையினை அல்லாஹ்வுக்காகவே நிறைவு செய்ய வேண்டும் என்பதை இது உணர்த்தவில்லையா?”

**அமல்களில் இடம்பெறக் கூடாத தற்பெருமை, முகஸ்துதி ஆகிய இரு பண்புகள்:**

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ ، قَالَ : قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَى : "أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ ، مَنْ عَمِلَ عَمَلًا أَشْرَكَ فِيهِ مَعِي غَيْرِي، تَرَكْتُهُ وَشِرْكَهُ" . (أخرجه مسلم)

அல்லாஹ் கூறுவதாக இறைத் தூதர் முஹம்மது நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். நான் இணை வைப்போரின் இணை வைப்பை விட்டும் எவ்வித தேவையுமற்றவன். யார் ஒருவர் ஒரு செயலைச் செய்து, அதில் என்னோடு பிறரையும் கூட்டாக்குகின்றாரோ அவரை அவரது இணைவைப்போடு விட்டுவிடுவேன். (நூல்: முஸ்லிம்)

புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் மற்றொரு அறிவிப்பில் ஜுன்துப் இப்னு அப்தில்லாஹ் (رضي الله عنه) அறிவிக்கின்றார்கள். “நான் நபி (ﷺ) அவர்களுக்கு அருகில் சென்றேன். அப்போது அவர்கள்,

مَن سَمَّعَ سَمَّعَ اللهُ بِهِ، ومَن يُرائِي يُرائِي اللهُ بِهِ

விளம்பரத்திற்காக நற்செயல் புரிபவர் (உடைய நோக்கம்) பற்றி அல்லாஹ் (மறுமை நாளில்) விளம்பரப்படுத்துவான். யார் ஒருவர் முகஸ்து திக்காக நற்செயல் புரிகின்றாரோ அல்லாஹ் (மறுமை நாளில்) அவரையும் அம்பலப்படுத்துவான்“ என்று கூறியதைக் கேட்டேன் எனக் கூறுகின்றார்கள்.

(புகாரி, முஸ்லிம்)




நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் வாகனத்தின் மீது அமர்ந்ததும்,

اَللّٰهُ أَكْبَرُ - (அல்லாஹு அக்பர்)

அல்லாஹ் மிகப் பெரியவன் என மூன்று தடவைகள் கூறுவார்கள். பின்னர்,

سُبْحٰنَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ (الزخرف : ١٣)

**“சுப்ஹானல்லதீ ஸஹ்ஹர லனா ஹாதா, வமா குன்னா லஹு முக்ரினீன். வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்”** (அஸ்ஸுக்ருஃப்: 13) என்ற இறைமறை வசனத்தில் இடம் பெறும் பிரார்த்தனையைக் கூறுவார்கள்.

**பொருள்:**

இதை சொந்தமாக்கி கொள்ள வசதியற்றவர்களாக இருந்த எமக்கு இதனை வசப்படுத்தித் தந்த (அல்லாஹ்) தூயவன். நாம் எமது இரட்சகனிடம் மீளக் கூடியவர்களே!

ஊரின் எல்லையைக் கடந்ததும்,

اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِيْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَالتَّقْوٰى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰى اَللّٰهُمَّ
هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هٰذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اَللّٰهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ

وَالْخَلِيْفَةُ فِي الْأَهْلِ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوْءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ.

என்று பிரார்த்திப்பார்கள். (நூல்: முஸ்லிம்).

**பொருள்:**

"யா அல்லாஹ் எமது இந்தப் பயணத்தில் நன்மை செய்வதையும் (உன்) அச்சத்தையும் நீ பொருந்தும் அமல்கள், புரிவதையும் உன்னிடம் வேண்டுகின்றோம்."

"யா அல்லாஹ்! எமது இந்தப் பயணத்தை இலகு வாக்கித் தருவாயாக! எமக்கு இதன் தூரத்தை சுருக்கித் தருவாயாக!"

"யா அல்லாஹ்! நீயே பயணத்தில் எமது பாதுகாப்புத் தோழன், நீயே குடும்பத்தில் பிரதிநிதி."

"யா அல்லாஹ்! பயணக் களைப்பு, கெட்ட பார்வை, பொருளாதாரத்திலும் குடும்பத்திலும் ஏற்படும் தீய முடிவுகளில் இருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்." (முஸ்லிம்)

## தக்பீ(B)ர், தஸ்பீ(B)ஹ் கூறுதல்

பள்ளத்தாக்கை நோக்கி கீழிறங்கும் போதும், அதில் இருந்து மேல் நோக்கி ஏறும் போதும், اَللّٰهُ أَكْبَرُ اَللّٰهُ أَكْبَرُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ **"அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லாஹு"** என்ற உயரிய வாசகங்களைத் தாழ்ந்த குரலில் கூறுதல் . (நூல்: புகாரி)

சமதரையில் செல்கின்ற போதும், அதில் இருந்து கீழ் நோக்கி பயணிக்கும் போதும் سُبْحَانَ اللّٰهِ "சுப்ஹானல்லாஹ்" என்று கூறுதல். (நூல்: புகாரி)




இதில்தான் ஒரு ஹாஜியின் ஹஜ்ஜின் முழுமையான திருப்தியும் மன நிம்மதியும் தங்கியுள்ளது. இதில் அதிகமானோர் குறைவு செய்வதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு சிலரைத் தவிர பலர் தாம் கொண்ட கொள்கை அல்லது மத்ஹபு அடிப்படையில் மக்களை ஹஜ் செய்ய பயிற்றுவிக்கிறார்களே அன்றி மாநபியின் வழியில் செய் வதற்கு அவர்கள் பயிற்றுவிப்பது குறைவாகும்.

நபி (ﷺ) அவர்கள் செய்தது ஒரேயொரு ஹஜ்ஜுதான். அதுவே அவர்களின் முதலாவதும் இறுதியானதுமான ஹஜ்ஜாகும். ஆனால், அதில் நூற்றுக்கணக்கான வழிமுறைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற போது நமது ஹாஜி களை வழி நடத்தும் முகவர்கள் பற்றி கவலைப்பட வேண்டிய வர்களாய் இருக்கின்றோம்.

இறுதி ஹஜ்ஜின் போது மக்களிடம்,

لِتَأْخُذُوا مَنَاسِكَكُمْ فَإِنِّي لَا أَدْرِي لَعَلِّي لَا أَحُجُّ بَعْدَ حَجَّتِي هَٰذِهِ (أخرجه مسلم)

“நீங்கள் உங்கள் ஹஜ்ஜுக்கான வணக்க முறைகளை (என்னில் இருந்து) எடுத்துக் கொள்ளுங்கள் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.” (முஸ்லிம்)

மேற்படி ஹதீஸ் இறைத் தூதரின் வழியில் ஹஜ் செய்ய வேண்டும் எனக் கட்டளையாகக் கூறுவதை இங்கு அவதானிக்கலாம்.

நபியைப் போன்று "ஹஜ்" செய்ய வேண்டியதன் அவசியத்தை நபித்தோழர்களின் வாழ்வில் நடந்த பின்வரும் நிகழ்ச்சி உறுதி செய்கின்றது.

...أَخْبِرْنِي عَنْ حَجَّةِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَقَالَ بِيَدِهِ فَعَقَدَ تِسْعًا، فَقَالَ : إِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَكَثَ تِسْعَ سِنِينَ لَمْ يَحُجَّ ، ثُمَّ أَذَّنَ فِي النَّاسِ فِي الْعَاشِرَةِ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَاجٌّ ، فَقَدِمَ الْمَدِينَةَ بَشَرٌ كَثِيرٌ كُلُّهُمْ يَلْتَمِسُ أَنْ يَأْتَمَّ بِرَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَيَعْمَلَ مِثْلَ عَمَلِهِ . (أخرجه مسلم)

முஹம்மத் பின் அலி பின் ஹஸன் (ﷺ) அவர்கள் ஜாபிர் (ﷺ) அவர்களிடம் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் ஹஜ்ஜைப் பற்றி எனக்கு அறிவியுங்கள் எனக் கேட்டார். அதற்கு அவர்கள், (ஹிஜ்ரத்தின் பின் நபி (ﷺ) அவர்கள் ஒன்பது ஆண்டுகள் ஹஜ் செய்திருக்கவில்லை என்பதை உணர்த்துவதற்காக) ஒன்பது முறை தனது கை விரல்களை மடக்கிக் காட்டி, ஒன்பது ஆண்டுகள் நபி (ﷺ) அவர்கள் "ஹஜ்" செய்யாது இருந்தார்கள். (ஹிஜ்ரி) பத்தாவது வருடம்தான் "ஹஜ்" செய்யப்போவதாக மக்களுக்கு அறிவிப்பு செய்தார்கள். நபி (ﷺ) அவர்களைப் பின்பற்றிடவும் அவர்கள் அமல் செய்வது போன்று அமல் செய்யவும் (மதீனாவை நோக்கி) பெரும் திரளான மக்கள் வந்து சேர்ந்தனர். (நூல்: முஸ்லிம்)

இவ்வாறு குறிப்பிடும் ஜாபிர் (ﷺ) அவர்களின் மேற்படி செய்தியை அவதானித்தால் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) எவ்வாறு ஹஜ் செய்தார்களோ அதே போன்று ஹஜ் செய்வதாலேயே அதன் பரிபூரண நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை

மத்ஹபுகள் பற்றி அறிவூட்டப்படாத இறைத்தூதரின் வழியை மாத்திரம் அறிவூட்டப்பட்ட நபி (ﷺ) அவர்களின் காலத்தில் வாழ்ந்த மக்கள் விளங்கிய காரணத்தினால்தான் பெரும் திரளான மக்கள் “ஹஜ்” செய்வதற்காக மதீனாவில் நபி (ﷺ) அவர்களுடன் ஒன்று சேர்ந்திருக்கின்றனர் என்பதை விளங்கலாம்.

இதை விடுத்து, “நமது மத்ஹபே நமக்குப் புகலிடம்” என்ற நிலையில் “மத்ஹப்” சார்ந்த மௌலவிகள் தமது ஹாஜிகளுக்கு குழப்பமான கருத்துக்களை போதிப்பதால் நபி வழிக்கு முரணான பல வழிமுறைகள், இறைத்தூதர் (ﷺ) செய்யாத பல பித்அத், அநாச்சாரங்கள் நன்மை செய்தல் என்ற பெயரில் அந்தப் புனித பூமியில் அரங்கேற்றப்படுவதை பார்க்கிறோம்.

யார் ஒருவர் மதீனாவில் புதிய நூதனங்களை உரு வாக்குகிறாரோ அல்லது நூதனத்தை உருவாக்குபவருக்கு அடைக்களம் அளிக்கின்றாரோ அவர் மீது அல்லாஹ்வின் சாபமும், வானவர்களின் சாபமும், அனைத்து மனிதர்களின் சாபமும் உண்டாகும். இவ்வுலகில் அவனிடமிருந்து (அதற்கு) ஈடானவைகளோ (மறுமையில்) எவ்வித பரிந்துரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. என இறைத்தூதர் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

எனவேதான், அந்த நிலை மாறி இறைத்தூதர் வழியில் கடமைகளை நிறைவு செய்வதற்காக ஹஜ்ஜில் நபியின் வழிமுறை பற்றியும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

எந்தவொரு செயலைச் செய்கின்ற போதும் இறைத் தூதரின் வழியே நமது வழி என நடப்பதும் இறைத்தூதர் மீதுள்ள பாசத்திற்கான அடையாளமாகும்.



# 06 ஹஜ் செய்வதன் அவசியம்

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். மக்காவில் இருக்கும் புனித கஃபா ஆலயத்தையும் அங்குள்ள புனித இஸ்லாமிய அடையாளச் சின்னங்களை பிரதானப்படுத்தியும் மேற்கொள்ளப்படும் இவ்வணக்கத்தை, அவ்வில்லம் சென்று நிறைவேற்ற சக்தியும் பண வசதியும் உடல் நலமும் பெற்ற, பருவ வயதை அடைந்த ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் அவசியம் ஒரு தடவை மிகவிரைவாக நிறைவேற்றுவது கடமையாகும்.

فِيهِ ءَايَٰتُۢ بَيِّنَٰتٞ مَّقَامُ إِبۡرَٰهِيمَۖ وَمَن دَخَلَهُۥ كَانَ ءَامِنٗاۗ وَلِلَّهِ عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلۡبَيۡتِ مَنِ ٱسۡتَطَاعَ
إِلَيۡهِ سَبِيلٗاۚ وَمَن كَفَرَ فَإِنَّ ٱللَّهَ غَنِيٌّ عَنِ ٱلۡعَٰلَمِينَ ٩٧ (آل عمران : ٩٧)

“அங்கு தெளிவான அத்தாட்சிகள் உண்டு. மகாமு இப்றாஹீம் (அதில் ஒன்றாகும்). அதனுள் பிரவேசித்தவர் அச்சமற்றவராகி விடுகின்றார். மனிதர்களில் அல்லாஹ்வின் (இல்லத்திற்கு சென்று வர) வசதியுடையோர் அவ்வில்லத்தை ஹஜ் செய்வது அவர்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாகும்.”

(ஆலுஇம்ரான்: 97)

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ :
"بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ ، شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ ،
وَإِقَامِ الصَّلَاةِ ، وَإِيتَاءِ الزَّكَاةِ ، وَالْحَجِّ ، وَصَوْمِ رَمَضَانَ . (متفق عليه)

"இஸ்லாம் ஐந்து அடித்தளங்கள் மீது அமைக்கப் பட்டுள்ளது. (அவை) உண்மையாக வணங்கப்படுவதற்கு தகுதியான நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மத் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாவார்கள், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல், ரமளானில் நோன்பு நோற்றல் ஆகியனவாகும்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : خَطَبَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ : «أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللهُ عَلَيْكُمُ الْحَجَّ فَحُجُّوا». فَقَالَ رَجُلٌ أَكُلَّ عَامٍ يَا رَسُولَ اللهِ؟ فَسَكَتَ حَتَّى قَالَهَا ثَلاَثًا ، فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : «لَوْ قُلْتُ نَعَمْ لَوَجَبَتْ وَلَمَا اسْتَطَعْتُمْ ، - ثُمَّ قَالَ - ذَرُونِي مَا تَرَكْتُكُمْ، فَإِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ بِكَثْرَةِ سُؤَالِهِمْ وَاخْتِلاَفِهِمْ عَلَى أَنْبِيَائِهِمْ ، فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ ».

(أخرجه مسلم)

எமக்கு பிரசங்கம் நிகழ்த்திய நபி (ﷺ) அவர்கள் "மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். ஆகவே விரைந்து ஹஜ் செய்யுங்கள்" என கட்டளையிட்டார்கள். ஒரு மனிதர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொரு ஆண்டுமா? எனக் கேட்டார். அவர்கள் பதில் கூறாது மௌனமானார்கள். அவர் மூன்று தடவைகள் கேட்ட பின்னர் நான் "ஆம்" எனக் கூறினால் அது கடமையாகிவிடும். நீங்கள் நிறைவேற்றிக் கொள்ள சக்தி பெற மாட்டீர்கள். நான் உங்களுக்குக் கட்டளையிடுபவைகளோடு நின்று கொள்ளுங் கள். _உங்களுக்கு முன்பு வாழ்ந்தோர் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் தமது தூதர்களோடு முரண்பட்டதாலுமே அழிந்து போனார்கள்_ எனக் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம்)

மேற்படி கடமையினை ஒருவர் திடகாத்திரமாகவும் உடல் வலிமையோடும் இருக்கின்ற போது செய்யும் போதுதான் அலாதியான திருப்தி அடைவார். காலம் தாழ்த்தி, வயதான பின்னர் செய்கின்ற போது ஏதோ கடமை முடிந்து விட்டதுதானே என பெருமூச்சு விடுவார் அவ்வளவுதான். அதனால் விரைந்து இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

'ஹஜ்' செய்வோர் அல்லாஹ்வின் மன்னிப்பையும், மகத்தான நற்கூலியையும் ஈருலகிலும் பெறுகின்றனர் என்பதை உணர்த்தும் பல நபிமொழிகள் ஹதீஸ் கிரந்தங் களில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் சில கீழே தரப் படுகின்றன.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ حَجَّ هٰذَا الْبَيْتَ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ" (أخرجه البخاري)

"யார் ஒருவர் இந்த வீட்டை ஹஜ் செய்து, (மற்றொரு அறிவிப்பில்: அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து) அவர் (ஹஜ்ஜில் தனது மனைவியுடன்) உடலுறவு கொள்ளாது, தீய செயல்களில் (செயலால், வார்த்தையால்) ஈடுபடவில்லையோ அவரை அவரது தாய் அன்றே பெற்றெடுத்தவர் போன்றவராக மீள்கின்றார்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "اَلْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا ، وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلَّا الْجَنَّةُ".

(متفق عليه)

"ஒரு உம்ரா, மறு உம்ரா வரையுள்ள சிறுபாவங்க ளுக்குப் பரிகாரமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜின் கூலி சுவனமாகும்" என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

أَنَّ الْإِسْلَامَ يَهْدِمُ مَا كَانَ قَبْلَهُ ، وَأَنَّ الْهِجْرَةَ تَهْدِمُ مَا كَانَ قَبْلَهَا ، وَأَنَّ الْحَجَّ يَهْدِمُ مَا كَانَ قَبْلَهُ . (أخرجه مسلم)

'இஸ்லாம்' அதற்கு முன்னால் உள்ள பாவங்களை அழித்துவிடும். 'ஹிஜ்ரத்' அதற்கு முன்னர் உள்ள பாவங்களை அழித்துவிடும். 'ஹஜ்' அதற்கு முன்னருள்ள பாவங்களை அழித்துவிடும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.
(நூல்: முஸ்லிம்)

عنْ عَائِشَةَ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "مَا مِنْ يَوْمٍ أَكْثَرَ مِنْ أَنْ يُعْتِقَ اللهُ فِيهِ عَبْدًا مِنَ النَّارِ مِنْ يَوْمِ عَرَفَةَ ، وَإِنَّهُ لَيَدْنُو ثُمَّ يُبَاهِيْ بِهِمُ الْمَلَائِكَةَ ، فَيَقُولُ : مَا أَرَادَ هَؤُلَاءِ" (أخرجه مسلم)

"அரஃபா தினத்தில் அல்லாஹ் நரகில் இருந்து அடியார்களை விடுதலை செய்வது போன்று வேறு எந்த தினத்திலும் அதிகமான நரகவாதிகளை விடுதலை செய்வதில்லை. அவன் அவர்களை நெருங்கிவருகின்றான். பின்னர், அவர்கள் பற்றி வானவர்களிடம் பெருமையாகப் பேசி, இவர்கள் என்ன எதிர்ப்பார்க்கின்றனர் என்றும் கேட்கின்றான்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

'ஹஜ்' என்றால் 'அரஃபா'தான் எனக் கூறிய இறைத்தூதர் அவர்களின் கூற்றின் மூலம், அரஃபாவில் தரிப்பதுடன் அரஃபா தினத்தில் அல்லாஹ் நரகவாதிகளை விடுதலை செய்வதும் ஒன்றாக இருப்பது உள்ளடங்கியிருக்கலாம்.

ஹஜ், உம்ராவின் சிறப்பை எடுத்துக் கூறும் ஆதார பூர்வமான பல நபி மொழிகள் ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் விரிவை அஞ்சி இந்த ஹதீஸுடன் போதுமாக்கிக் கொள்ளப்படுகின்றது.




# வருடம் தோறும் ஹஜ் செய்வது கடமையா?

வாழ்நாளில் ஒரு தடவை ஹஜ் செய்வதே கடமை என்பதை முன்னர் கூறினோம். வருடா வருடம் ஹஜ் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதை பின்வரும் நபிமொழி உறுதி செய்கின்றது.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ خَطَبَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَقَالَ : « أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللهُ عَلَيْكُمُ الْحَجَّ فَحُجُّوا ». فَقَالَ رَجُلٌ أَكُلَّ عَامٍ يَا رَسُولَ اللهِ؟ فَسَكَتَ حَتَّى قَالَهَا ثَلاَثًا فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : « لَوْ قُلْتُ نَعَمْ لَوَجَبَتْ وَلَمَا اسْتَطَعْتُمْ" ، ثُمَّ قَالَ : "ذَرُونِي مَا تَرَكْتُكُمْ فَإِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ بِكَثْرَةِ سُؤَالِهِمْ وَاخْتِلاَفِهِمْ عَلَى أَنْبِيَائِهِمْ ، فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ ».

(أخرجه مسلم)

“எமக்கு பிரசங்கம் நிகழ்த்திய நபி (ﷺ) அவர்கள் “மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். ஆகவே விரைந்து ஹஜ் செய்யுங்கள்” என கட்டளையிட்டார்கள். ஒரு மனிதர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொரு ஆண்டுமா? எனக் கேட்டார். அவர்கள் பதில் கூறாது மௌனமானார்கள். அவர் மூன்று தடவைகள் கேட்ட பின்னர் நான் “ஆம்” எனக் கூறினால் அது கடமையாகிவிடும்.

நீங்கள் நிறைவேற்றிக் கொள்ள சக்தி பெற மாட்டீர்கள். நான் உங்களுக்கு கட்டளையிடுபவைகளோடு நின்று கொள்ளுங்கள். உங்களுக்கு முன்பு வாழ்ந்தோர் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் தமது தூதர்களோடு முரண்பட்டதாலுமே அழிந்து போனார்கள்" எனக் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம்)

இதன் மூலம் 'ஹஜ்' வாழ்நாளில் ஒரு தடவை செய்யப்பட வேண்டிய கடமை என்பதை விளங்கலாம். மேலும், கடமைகள் என்ற பெயரில் இஸ்லாம் மக்கள் மீது சுமைகளைத் திணிக்காது இலகுவைக் கடைப்பிடிப்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

வசதி படைத்த ஒரு முஸ்லிம் தனது வாழ் நாளில் ஒரேயொரு தடவை மாத்திரம் அவன் மீது கடமையாக்கப்பட்ட இந்தக் கடமையைக் கூட நம்மில் செல்வம் படைத்த பலர் அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வங்களையும் மறந்து பலவிதமான சாக்குப் போக்குகளைக் கூறி அலட்சியம் செய்கின்ற நிலைமைகளை அவதானிக்கின்றோம். இது கடமையான ஒரு ஃபர்ழை அவர் உதாசீனம் செய்வதற்கும் போதுமான சான்றாகும்.

"நாளை செய்வோம்", "வரும் வருடம் செய்வோம்" போன்ற உணர்வுகள் ஷைத்தானின் புறத்திலிருந்து வருகின்ற தீய அறிவுரைகளாகும்.

குடும்பத்தில் நிகழும் முக்கிய நிகழ்வுகளுக்காகப் பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்வோர் ஒரு சில இலட்சங்களை அல்லாஹ்வுக்காக இழப்பதற்கு சிந்திப்பதனா-லேயே பலர் ஹஜ்ஜைத் தவற விடுகின்றனர்.




# 08 உடல் பலவீனமான பெற்றோருக்கான ஹஜ்

மரணித்த அல்லது வாகனத்தில் அமர்ந்து மக்கா சென்று ஹஜ் செய்ய சக்தி அற்ற, இயலாத அல்லது நோயில் வாழ்கின்ற தமது பெற்றோருக்காக அவர்களின் பிள்ளைகள் செய்கின்ற மிகப் பெரிய உன்னத தர்மங்களில் இதுவும் ஒன்றாகும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما أَنَّ امْرَأَةً مِنْ خَثْعَمَ سَأَلَتِ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ غَدَاةَ جَمْعٍ فَقَالَتْ يَا رَسُولَ اللهِ فَرِيضَةُ اللهِ فِي الْحَجِّ عَلَى عِبَادِهِ أَدْرَكَتْ أَبِي شَيْخًا كَبِيرًا لَا يَسْتَمْسِكُ عَلَى الرَّحْلِ ، أَفَأَحُجُّ عَنْهُ ؟ قَالَ : نَعَمْ ، (البخاري) وفي رواية له :- وَذَلِكَ فِي حَجَّةِ الْوَدَاعِ. (متفق عليه)

“ஹஸ்அம்” கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி அல்லாஹ்வின் தூதரிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! ஹஜ் அல்லாஹ் தனது அடியார்கள் மீது விதித்த அவனது கடமையாக இருக்கின்றது. எனது தந்தை வாகனத்தில் அமர முடியாத அளவு முதியவராக இருக்கின்றார். ஆகையால், அவருக்காக நான் ஹஜ்ஜை நிறைவேற்றலாமா?” எனக் கேட்டார். “ஆம். அவருக்காக நீ ஹஜ் செய்து கொள்” என நபி ﷺ அவர்கள் பதில் கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

புகாரியின் மற்றொரு அறிவிப்பில், இது “ஹஜ்ஜத்துல் வதா” அதாவது நபி ﷺ அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது நடைபெற்றதாகும் என இடம் பெற்றுள்ளது.



# 09

# மரணித்த பெற்றோருக்காகவும் ஹஜ் செய்யலாம்

இஸ்லாம் பெற்றோர் உயிருடன் இருக்கின்ற போது அவர்களை மிகவும் மரியாதையோடு நடத்தப் பணித்திருப்பது போன்று, அவர்கள் மரணித்த பின்னாலும் அவர்கள் பெயரில் செய்வதற்கென அழகிய வழிமுறைகளையும் கற்றுத் தந்துள்ளது.

அதில் ஹஜ் மற்றும் அவர்களுக்காகச் செய்ய வேண்டிய பிரார்த்தனை, நிலையான தர்மங்கள் என்பன பிரதான இடத்தை வகிக்கின்றன.

عَنِ ابْنِ عَبَّاسٍ ، رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ امْرَأَةً مِنْ جُهَيْنَةَ جَاءَتْ إِلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَتْ : إِنَّ أُمِّي نَذَرَتْ أَنْ تَحُجَّ ، فَلَمْ تَحُجَّ حَتَّى مَاتَتْ ، أَفَأَحُجُّ عَنْهَا ؟ قَالَ : "نَعَمْ حُجِّي عَنْهَا ، أَرَأَيْتِ لَوْ كَانَ عَلَى أُمِّكِ دَيْنٌ أَكُنْتِ قَاضِيَةً ، اقْضُوا اللهَ ، فَاللهُ أَحَقُّ بِالْوَفَاءِ . (أخرجه البخاري)

“ஜுஹைனா கோத்திரப் பெண்மணி ஒருவர் நபி (ﷺ) அவர்களிடம் வந்து எனது தாய் ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார், (அதற்கு முன்னர்) அவர் மரணித்துவிட்டார். அவருக்காக நான் ஹஜ் செய்யலாம்தானே? எனக் கேட்டார். உனது தாய் மீது கடன் இருப்பின் நீ அதை நிறைவேற்றுவாய் தானே? என அவரிடம் நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள்.

அவர் ஆம் என்றார். அப்படியானால் அல்லாஹ்வுக்குரிய கடனை நீ அவருக்காக நிறைவேற்று, அவன் நிறைவேற்ற மிகவும் தகுதியானவன் எனக் கூறினார்கள்.” (புகாரி)

**ஹஜ் செய்யாது மரணித்த சகோதரிக்காக ஹஜ் செய்யலாம்:**

ஹஜ் செய்ய நேர்ச்சை செய்த நிலையில் மரணிப்போருக்காக ஹஜ் செய்வது பற்றி பின்வரும் ஹதீஸில் தெளிவு உள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : أَتَى رَجُلُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ لَهُ : إِنَّ أُخْتِي قَدْ نَذَرَتْ أَنْ تَحُجَّ ، وَإِنَّهَا مَاتَتْ ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَوْ كَانَ عَلَيْهَا دَيْنٌ أَكُنْتَ قَاضِيَهُ؟ قَالَ : نَعَمْ ، قَالَ : فَاقْضِ اللهَ فَهُوَ أَحَقُّ بِالْقَضَاء. (أخرجه البخاري)

“நபி (ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, எனது சகோதரி ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார், (அதற்கு முன்னால்) அவர் மரணித்துவிட்டார் எனக் கூறினார், அவள் மீது கடன் இருப்பின் நீ அதை நிறைவேற்றுவாய்தானே? என அவரிடம் நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள், அவர் ஆம் என்றார். அப்படியானால் அல்லாஹ்வுக்குரிய கடனை நிறைவேற்று, அவன் நிறைவேற்ற மிகவும் தகுதியானவன் எனக் கூறினார்கள்.” (நூல்: புகாரி)

**குறிப்பு: மரணித்த பெற்றோருக்காக ஹஜ்ஜை நிறைவேற்றுவது போன்று ஹஜ்ஜுடன் இல்லாத தனித்த உம்ராவை மாத்திரம் நிறைவேற்றலாமா? என்ற வாதப் பிரதிவாதங்கள் அறிஞர்கள் மத்தியில் காணப்படுகின்றன.**

ஹஜ், உம்ரா ஆகிய இரண்டும் ஒரே கோட்பாட்டை ஒத்திருப்பதால் மரணித்தவருக்காக உம்ராவையும் நிறைவேற்றலாம் எனப் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டினாலும்

உம்ராவை தனித்து நிறைவு செய்வது பற்றி இன்றும் அறிஞர்கள் கருத்து வேறுபாட்டில் இருப்பதை அறிகின்றோம்.

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். ஹஜ்ஜைப் போன்று கடமையாக்கப்படாத உம்ராவுக்கு ஹஜ்ஜுக்காத் தரப்பட்ட அனுமதியை ஒப்பிடலாமா? முடியாதா? என்ற கேள்வியும் வாதங்களும் எழுவது இயல்பானதே!

நபித்தோழர்கள் வரலாற்றில் இவ்வாறான நடைமுறை காணப்பட்டதா? எனத் தேடிப்பார்த்தால் திர்மிதி, சுனன் நஸயி, அபூதாவூத் ஆகிய கிரந்தங்களில் பின் வரும் செய்தி இடம் பெற்றுள்ளது.

عَنْ أَبِي رَزِينٍ الْعُقَيْلِيِّ رَضِيَ اللهُ عَنْهُ ، أَنَّهُ أَتَى النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ: يَا رَسُولَ اللهِ إِنَّ أَبِي شَيْخٌ كَبِيرٌ، لَا يَسْتَطِيعُ الْحَجَّ، وَلَا الْعُمْرَةَ، وَلَا الظَّعْنَ قَالَ: «حُجَّ عَنْ أَبِيكَ، وَاعْتَمِرْ» (أخرجه الترمذي وأبو داود والنسائي)

இறைத்தூதர் அவர்களே! எனது தந்தை வாகனத்தில் ஏறிப் பயணிக்கவோ, ஹஜ்-உம்ரா செய்யவோ முடியாமல் இருக்கின்றார் எனக் கூறிய போது நீ அவருக்காக ஹஜ் மற்றும் உம்ரா செய்துகொள் என இறைத்தூதர் அவர்கள் பதிலளித்ததாக இடம் பெறும் செய்தியை ஸஹீஹான செய்தி என்று காணும் அறிஞர்கள் ஹஜ்ஜைப் போன்று உம்ராவையும் நிறைவேற்றலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

(திர்மிதி, அபூதாவூத், நஸாஈ)

இது அறிஞர்கள் பலரின் பார்வையாக இருப்பது ஒரு மறைமுகமான இஜ்மாவை ஒத்ததாகவே நோக்க வேண்டி உள்ளது. இந்த ஹதீஸை வைத்து மரணித்த தமது உறவுகளுக்காக உம்ரா செய்வோரை நாம் தடுக்க முடியாது. (அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்) இருப்பினும் இவர்கள் ஒரு பயணத்தில் பல உம்ராக்கள் செய்வதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.



# 10

# பிறருக்காக ஹஜ், உம்ரா செய்வதற்கான நிபந்தனை

ஒருவர் தனது பெற்றோருக்காக அல்லது உறவினர் களுக்காக ஹஜ் அல்லது உம்ரா செய்வதாயின் முதலாவதாக அவர் தனக்குரிய ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ سَمِعَ رَجُلًا يَقُولُ لَبَّيْكَ عَنْ شُبْرُمَةَ ، قَالَ مَنْ شُبْرُمَةُ؟ قَالَ أَخٌ لِي أَوْ قَرِيبٌ لِي ، قَالَ : حَجَجْتَ عَنْ نَفْسِكَ؟ قَالَ : لَا ، قَالَ : حُجَّ عَنْ نَفْسِكَ ثُمَّ حُجَّ عَنْ شُبْرُمَةَ .

(أخرجه أبوداود)

“ஒரு மனிதர் ‘லெப்பைக்க - அன் - ஷுப்ருமா’ இது ‘ஷுப்ருமா’ என்பவருக்கான ஹஜ் எனக் கூறிய போது ‘யார் அந்த ஷுப்ருமா என நபி (ﷺ) அவர்கள் வினவினார்கள். அவர், “எனது சகோதரர் அல்லது உறவினர் எனப் பதில் கூறினாார். நீ உனக்காக ஹஜ் செய்து விட்டாயா?’ எனக் கேட்டார்கள். ‘இல்லை’ என்றதும், ‘(முதலில்) உனக்காக ஹஜ் செய், பின்னர் (வரும் காலங்களில்), ஷுப்ருமாவிற்காக ஹஜ் செய்’ எனக் கூறினார்கள். (நூல்: அபூதாவூத்)

இந்த ஹதீஸையே மற்றவருக்காக உம்ரா செய்வோரும் அமுல் நடத்தக் கடமைப்பட்டுள்ளனர்.



## 11

## மஹ்ரமின்றி ஒரு பெண் தனித்தோ அல்லது பல பெண்களோடு சேர்ந்தோ ஹஜ்ஜுக்காகச் செல்ல முடியுமா?

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் பிரதான கடமைகளில் ஒன்றாகும். அதனை ஒரு ஆண் தனிமையாக நிறைவேற்ற அனுமதி இருப்பது போன்று ஒரு பெண் தனியாகச் சென்று நிறைவேற்றலாமா? என்பதில் இரு கருத்துக்கள் காணப் பட்டாலும் அவர் தனிமையாகவோ அல்லது பல பெண்கள் சேர்ந்தோ நிறைவேற்ற மார்க்கத்தில் அனுமதி இல்லை என்பதே குர்ஆன், மற்றும் சுன்னாவில் இருந்து நாம் பெற முடியுமான தெளிவாக இருக்கின்றது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما عَنْ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لَا يَخْلُوَنَّ رَجُلٌ بِامْرَأَةٍ إِلَّا مَعَ ذِي مَحْرَمٍ" ، فَقَامَ رَجُلٌ ، فَقَالَ : يَا رَسُولَ اللهِ ، امْرَأَتِي خَرَجَتْ حَاجَّةً ، وَاكْتُتِبْتُ فِي غَزْوَةِ كَذَا وَكَذَا ، قَالَ : ارْجِعْ فَحُجَّ مَعَ امْرَأَتِكَ . (متفق عليه)

நபி (ﷺ) அவர்கள் ஒரு நாள் தனது உரையில், “அந்நிய ஒரு பெண்ணுடன் எந்த ஒரு ஆணும் தனித்திருக்க வேண்டாம்”, மஹ்ரம் (மணம் முடிக்க மார்க்கத்தில் தடை செய்யப்பட்டவர், அல்லது கணவர்) உடனே அன்றி பயணம் செய்ய வேண்டாம் எனக் கூறியதை செவிமடுத்த ஒரு மனிதர் எழுந்து, “அல்லாஹ்வின் தூதரே! நான் இன்ன, இன்ன போர்களில் கலந்து கொள்ள வேண்டும் எனப் பெயர் பதியப் பட்டிருக்கின்றேன், எனது மனைவியோ ஹஜ் செய்வதற்காகத்

தனியாக புறப்பட்டு சென்று விட்டார் என்றார். அவரிடம், "நீ உடன் திரும்பிப் போய், உனது மனைவியுடன் ஹஜ் செய்" எனப் பணித்தார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸையும் இன்னும் பல ஹதீஸ்களையும் ஆதாரமாகக் கொண்டே ஒரு பெண் தனித்தோ அல்லது பல பெண்களோ (திருமணம் முடிக்க தடை செய்யப்பட்ட) மஹ்ரமான ஆண்கள் துணையின்றி தனிமையில் ஹஜ் பயணமோ அல்லது வேறு பயணங்களோ செல்லக் கூடாது என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். (மேலதிக சட்டங்களை விரிவாக அறிந்துகொள்ள ஷரீஆவை துறைசார் அறிஞர்களை அணுகவும்.)

அரபு தேசங்கள் ஐரோப்பிய காலணித்துவ ஆக்கிர-மிப்புக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அரபு மாணவ, மாண-வியர் ஐரோப்பிய நாடுகளில் புலமைப் பரிசில்கள் பெற்று அங்கு பெண்ணிலை வாதம் தொடர்பாக அவர்கள் மூலைச் சலவை செய்யப்பட்டு நாடு திரும்பி இஸ்லாமிய சமூகத்தில் ஹிஜாப் மற்றும் பெண்ணுரிமைக் கோஷங்கள் எழுப்பப்படும் வரை முஸ்லிம்கள் பெண் சுதந்திரம் பற்றிப் பேசவில்லை. அந்தத் தேவை அவர்களுக்கு இன்னும் இல்லை எனும் நிலையில் பெண்கள் மிகவும் கண்ணியமாகவே நடத்தப்-படுகின்றனர் என்பதை உணரலாம்.

அரபு நாடுகளில் பெண்ணியம் பேசுவோர் ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்ற "கருப்பை சுதந்திரம்" அதாவது, கண்டவரோடு படுத்துறங்கும் உரிமை, "விபச்சாரம்", "ஆண் - பெண் கலப்பு வாழ்க்கை", "நிர்வாணமாகத் திரிதல்" போன்ற மிருகக் கலாசார முறையைத்தான் அவர்கள் அரபு நாடுகளில் (மறைமுகமாக) எதிர்பார்க்கின்றனர். அதனால்தான் அங்கு பெண்ணுரிமை முடக்கப்பட்டுவிட்டதாகக் கோஷமும் போடுகின்றனர்.



# 12 மஹ்ரமின்றி தனியாகச் சென்று ஹஜ் செய்வதை அனுமதிப்போரின் வாதம்

“நம்பகமான பெண்கள் பலருடன் சேர்ந்து ஒரு பெண் ஹஜ்ஜை நிறைவேற்றலாம்” என்பது இலங்கை போன்ற நாடுகளில் ஹஜ் முகவர்கள் பல்லாண்டுகளாக முன்வைக்கின்ற வாதமாகும்.

தென்கிழக்காசிய நாடுகளில் ஹஜ் முகவர்கள் பெரும்பாலும் ஷாஃபி மத்ஹபைச் சார்ந்தோராக தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோராக இருப்பதாலும் தமது குழுவில் ஹாஜி ஒருவரை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாலும் தாம் சார்ந்த மத்ஹப் நூலில் எழுதப்பட்டுள்ள இவ்வாறானதொரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பெண் தனக்கான மஹ்ரம் துணை இன்றி, பல பெண்களோடு ஹஜ் செய்யலாம் என வாதிடுகின்றனர் போலும்!

ஒரு பெண் தனிமையில் ஊரில் உள்ள பள்ளிக்குச் சென்று தொழுகையை நிறைவேற்றுவதில் தாராள அனுமதி இருப்பது போன்று தனித்தவளாக ஹஜ் செய்யச் செல்லலாமா? முடியாதா? என்ற வாதப்பிரதிவாதங்கள் மார்க்க அறிஞர்கள் வட்டத்தில் காணப்படுகின்றன.

“மஹ்ரம்” என்ற ஆண் துணையுடன் ஒரு பெண் ஒரு நாள் பயணம் செய்வது, அல்லது ஹஜ்ஜுக்கான பயணம் செய்வது என்பது நபி (ﷺ) அவர்கள் கட்டாயப்படுத்தியுள்ள கடமைகளில் ஒன்றாகும்.

எனவே, அவள் மஹ்ரம் இன்றி நம்பகமான பல பெண்களோடு இணைந்து ஹஜ்ஜுக்குச் செல்லலாம் என்றால் புனித ஜிஹாதை விட்டு விட்டு நபித்தோழரை தனது மனைவியுடன் ஹஜ்ஜை நிறைவேற்றும்படி நபி (ﷺ) அவர்கள் ஏன் பணித்தார்கள் (?) என நாம் சிந்திக்க வேண்டும்.

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் வாழ்ந்த ஆண்க-ளையும் பெண்களையும் விடவுமா இந்தக் காலத்து மக்கள் நம்பிக்கையிலும் நாணயத்திலும் உயர்ந்தவர்களாகிப் போனார்கள் (?) என்ற மற்றொரு கேள்வியும் உண்டு.

இரண்டாவது:

ஹஜ் காலங்களில் மஹ்ரம் இன்றி செல்கின்ற பெண் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அவரை அழைத்துச் செல்வது மற்றும் பணிவிடைகள் செய்வது போன்ற இன்னோரன்ன அடிப்படையான தேவைகளுக்கு மஹ்ரமான ஆண் அவருடன் கூடவிருந்து செய்வது போன்று சாத்தியமாகுமா? என்பதை மாத்திரம் சிந்தித்தாலே பெண்கள் மஹ்ரம் இன்றி, தனிமையாகச் செல்வது ஆகுமானதா? என மிக இலகுவாக முடிவு செய்து கொள்ள முடியும்? அதனால் ஒரு பெண் மஹ்ரம் இன்றி ஹஜ் செய்ய முடியாது என்பதையே நாம் சரியான கருத்தாகக் கொள்கின்றோம்.

ஏனெனில், பெண்களின் முழுப் பாதுகாப்பும் ஒழுக்க விழுமியங்களும் மஹ்ரமான ஆணோடு ஹஜ் செய்வதில்தான் உத்தரவாதப்படுத்தப்படும். (அல்லாஹ்வே மிக அறிந்தவன்)



# 13

# அதீ பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களின் ஹதீஸை ஆதாரமாகக் காட்டி அனுமதிப்போருக்கான மறுப்பு

குர்ஆன், சுன்னாவை மாத்திரம் பின்பற்றுவோராக தம்மை அடையாளப்படுத்திய சிலரும், ஷேக் யூசுஃப் அல்கர்ளாவி போன்றோரின் கருத்துக்களை முற்போக்கான கருத்துக்களாகச் சரிகாணுவோரும், இதில் ஒருபடி மேலே சென்று ஒரு பெண் தனிமையாகச் சென்று ஹஜ் செய்யலாம் என்பதற்கு அதிய் பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களைத் தொடர்பு படுத்தி புகாரியில் இடம் பெறும் பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் குறிப்பிடுகின்றனர்.

அந்தச் செய்தியை ஆரம்பம் முதல் இறுதிவரை வாசித்தால் அது இறுதித்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அவர்களின் மரணத்தின் பின்னால் நடக்கவிருக்கின்ற ஒரு முன்னறிவிப்பு பற்றி அதிய் பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களிடம் பேசிய, அவர்கள் உயிர் வாழும் போது பிற்காலத்தில் அதுவும் அப்படியே நடந்தேறிய ஒரு ஹதீஸாகும் என்பதை முதலில் தெரிந்து கொண்டு அதிய் பின் ஹாதிம் (ﷺ) அறிவிக்கின்ற அந்த ஹதீஸை இப்போது படியுங்கள்.

நபி (ﷺ) அவர்கள் அதிய் (رضي الله عنه) அவர்களிடம் "அதிய்யே நீ அல்ஹீரா என்ற (ஈராக்)கின் ஒரு நகரைப் பார்த்ததுண்டா? எனக் கேட்க, அவர்கள் நான் அதைப்பார்த்தில்லை. அது பற்றி கேள்விப்பட்டுள்ளேன் எனக் கூறினார்கள். அப்போது,

அல்லாஹ்வின் தூதர் அவர்கள், அதியே "நீ நீண்ட காலம் வாழ்ந்தால் தனது ஒட்டகத்தில் பயணம் செய்யும் ஒரு பெண் அந்த அல்ஹீராவில் இருந்து கஃபா வரை (தன்னந்தனியே) வந்து கஃபாவை தவாஃப் செய்வதைக் காண்பாய், அவள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அஞ்சமாட்டாள்" எனக் கூறினார்கள் (புகாரி)

அந்த முன்னறிவிப்பானது தான் உயிர் வாழ்ந்த போதே நடந்தேறியது பற்றி அதிய் (﵁) அவர்கள் அறிவிக்கின்ற போது,

قَالَ عَدِيٌّ رَضِيَ اللهُ عَنْهُ فَرَأَيْتُ الظَّعِينَةَ تَرْتَحِلُ مِنَ الْحِيرَةِ حَتَّى تَطُوفَ بِالْكَعْبَةِ لاَ تَخَافُ إِلاَّ اللهَ (أخرجه البخاري : ٣٥٩٥)

"ஒட்டகத்தில் பயணம் செய்யும் ஒரு பெண் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவரையும் பயப்படாமல் "அல்ஹீரா" என்ற அந்த நகரத்தில் இருந்து கஃபாவை நோக்கி ஒட்டகத்தில் தனிமையாக வந்து தவாஃப் செய்வதைக் கண்டேன்" எனக் குறிப்பிடுகின்றார்கள். (புகாரி)

அதிய் பின் ஹாதிம் (﵁) அவர்கள் அறிவிக்கும் மேற்படி செய்தியை ஆதாரமாகக் கொண்டே ஒரு பெண் ஹஜ்ஜுக்காக தனிமையில் பயணம் மேற்கொள்வதில் தவறில்லை என்கின்றனர்.

**விளக்கம்:**

**நபி (ﷺ) அவர்கள் காலத்தில் வழிப்பறிக் கொள்ளை பற்றி முறையிட்ட போது, பிற்காலத்தில் அச்சம் இன்றி மக்கள் வாழ்வது, பெண்கள் தனிமையில் பயணம் செய்வது பற்றியே மேற்படி ஹதீஸ் பேசியுள்ளது.**

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் தூரப் பிரதேசங்களில் காணப்பட்ட வழிப்பறிக் கொள்ளை, திருட்டு, கடத்தல் போன்ற

குற்றவியல் சம்பவங்கள் நடைபெறுவதாலும், மக்கள் அச்சமாக வாழ்வது பற்றியும் ஒரு மனிதர் இறைத்தூதர் அவர்களிடம் முறைப்பாடு செய்கின்றார்.

அதற்குப் பதில் கூறும் வகையில் நபி (ﷺ) அவர்கள் அந்த வழிமுறை ஒழிக்கப்பட்டு மக்கள் அச்சமின்றி வாழும் சூழல் உருவாக்கப்படும் என்பது பற்றிக் கூறியுள்ளார்கள் என்பதையே அதி பின் ஹாதிம் (ரழி) அவர்கள் தொடர்பான அந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் காலத்தில் நடை பெற்ற வழிப்பறிக் கொள்ளை, வறுமை ஆகியவற்றை முறைப்பாடு செய்த போதே இந்த முன்னறி விப்பை அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தனது காலத்தைக் கூட அச்சம், பீதி, வறுமை அற்ற காலம் என்று கூடக் கூறவில்லை என்பதோடு, அவர்களின் காலத்தில் பெண்கள் தனித்து பயணங்கள் செய்வதை தடுத்தும் இருந்தார்கள் என்றால் இது எதைச் சுட்டிக்காட்டுகின்றது என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த நிகழ்வு அதிய் (رضي الله عنه) அவர்களின் வாழ்நாளிலேயே நடந்தேறியது. அதை உண்மைப்படுத்தும் வகையில் அதன் நேரடி அறிவிப்பாளரான அதிய் (رضي الله عنه) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடுகின்ற போது, "ஒரு பெண் ஒட்டகத்தில் ஏறி அந்த அல்ஹீராவில் இருந்து கஃபா வரைத் (தனிமையாக) வந்து தவாஃப் செய்வதைக் கண்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அவள் அஞ்சமாட்டாள்", என குறிப்பிடுகின்றார்கள்.
(நூல்: புகாரி)

இது இறைத் தூதரின் காலத்தைக் கூட குறிப்பிட வில்லை. அதனால்தான் போருக்குப் புறப்படத்தயாராக இருந்த தனது தோழர்களில் ஒருவரை நீ உனது மனைவியோடு

சேர்ந்து ஹஜ்ஜுக்குச் செல் எனப் பணித்துள்ளார்கள் என்பது இந்த நிகழ்வோடு தொடர்புபடுத்தி அறிந்து கொள்ள வேண்டிய மற்றொரு அம்சமாகும்.

மேற்படி ஹதீஸை கொலைகளும் கொள்ளைகளும் மலிந்து காணப்படும் இந்தக் காலத்திற்கு ஒப்பிடலாமா? என்றால், அனைவரும் இல்லை! என்றே கூறுவர்.

என்றும்போல் உலகில் அச்சமற்ற நாடுகளில் முதலாவது நாடு என 2020ம் ஆண்டும் போற்றப்படும் சவூதி அரேபியாவில் கூட கணவனுடன் ஹஜ் செய்யச் சென்ற பெண்கள் ஓரிருவர் கடத்திக் கற்பழிக்கப்பட்டு; கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றால் என்றோ ஒரு நாள் நடந்தேறிய முன்னறிவிப்பைக் கொண்டு பெண்கள் தனிமையில் ஹஜ் செய்யலாம் என முடிவு செய்வது ஹதீஸுக்கு உடன்பாடான விளக்கமாகத் தெரியவில்லை.

**ஐயம்:-**

**அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் ஜமல் போரின் போது ஈராக்கின் கூஃபா நகர் நோக்கி பயணித்துள் ளார்களே! நாம் ஹஜ்ஜுக்காக செல்வதை எவ்வாறு தவறாகக் கொள்ள முடியும்?**

**தெளிவு:-**

**இது அவர்களின் தனிப்பட்ட ஒரு முடிவாகும். நபித் தோழர்கள் பலர் இதனை விரும்பவில்லை. அப்படி இருந்தும் இஸ்லாத்தில் சமரசம் செய்துவைத்தல் விரும்பத்தக்க செயல் எனக் காரணம் காட்டியே அவர்கள் அவ்வாறு புறப்பட்டுச் சென்றதாக வரலாறு சொல்கின்றது.**

அத்துடன், பிற்காலத்தில் தனது இந்தத் தவறை உணர்ந்த அன்னை ஆயிஷா அவர்கள் தனது முந்தானை நனையும் அளவு அழுது கண்ணீர் வடித்துள்ளார்கள் என

ஆதாரபூர்வமான செய்திகள் குறிப்பிடுவதைக் கவனித்தால் இது போன்ற செய்திகள் ஒரு பெண் தனிமையில் ஹஜ் செய்வதற்கு எந்த வகையிலும் ஆதாரமாகக் கொள்ள முடியாதவை என்பதை அறியலாம்.

நபி (ﷺ) அவர்களின் மேற்படி கட்டளையை மீறி ஸஹாபிப் பெண்கள் யாராவது இவ்வாறு சென்றிருப்பார்களாயின், அவர்கள் என்ன ஆதாரத்தின் அடிப்படையில் சென்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதில் தெளிவான ஆதாரங்கள் காணப்படுமானால் அது பற்றி முடிவு செய்யலாம். இல்லாத போது அவர்களின் விருப்பம் மார்க்கத்தின் முடிவாக முடியாது என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

தமது மனைவியர் மாற்றானுடன் புன்முறுவல் பூப்பதையே விரும்பாதவர்கள், மாற்றான் மனைவி தனது குழுவில் இணைந்து ஹஜ் செய்வதை அனுமதிக்கின்றார்கள் என்றால் அதில் உலகியல் இலாபமின்றி வேறு என்னதான் இருக்க முடியும்?

## ஹஜ்ஜுக்கான காலங்கள்:

ஹஜ்ஜுக்கான காலங்களாக ஷவ்வால், துல்கஃதா, துல் ஹிஜ்ஜா ஆகிய மாதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒருவர் ஷவ்வால் மாதத்தில் இருந்து துல்ஹஜ் பிறை எட்டு வரை ஹஜ்ஜுக்காக தன்னைத் தயார்படுத்தலாம். அதே வேளை உம்ராவிற்கென கால நிர்ணயம் கிடையாது.

ஹஜ்ஜுடன் இணைந்து செய்யப்படும் உம்ராவாக இருப்பின் அதை மேற்குறிப்பிட்ட மாதங்களிலேயே நிறை-வேற்ற வேண்டும். (இதன் விபரம் ஹஜ்ஜின் வகைகள் எனும் தலைப்பில் பின்னர் தரப்படும்).

ٱلْحَجُّ أَشْهُرٌ مَّعْلُومَٰتٌ ۚ فَمَن فَرَضَ فِيهِنَّ ٱلْحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوقَ وَلَا جِدَالَ فِى ٱلْحَجِّ ۗ ... ﴿١٩٧﴾

(البقرة : ١٩٧)

ஹஜ்(ஜுக்குரிய காலம்) அறியப்பட்ட சில மாதங்களாகும். ஆகவே, அவற்றில் எவர் (தன்மீது) ஹஜ்ஜைக் கடமையாக்கிக் கொண்டாரோ அவர் (ஹஜ் கடமைக்குள் பிரவேசித்த பின்னர்) உடலுறவு கொள்வதோ, தீய செயல்கள் புரிவதோ, வீண் தர்க்கம் செய்வதோ கூடாது. (அல்பகரா: 197)

மேற்படி திருமறை வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் ஒருவர் மேற்கூறப்பட்ட மாதங்களில் தலைப்பிறை தென்பட்டது முதல் துல் ஹஜ் எட்டு வரையிலும் உள்ள காலப் பகுதியில் ஹஜ் செய்வதற்காக தன்னைத் தயார் படுத்திக் கொண்டு மக்கா செல்ல முடியும் என்பதை விளங்கலாம்.

உலக முஸ்லிம்கள் தம்மை ஹஜ்ஜுக்காகத் தயார் படுத்திக் கொண்டு ஒட்டகம், பாய்க்கப்பல் மற்றும் நடையாக என பலவிதமான வழிகளில் புனித கஃபாவை நோக்கி வந்து சேர்வதற்கு அல்லாஹ் இலகுவாக்கிக் கொடுத்த ஒரு வழியாகவும் ஹஜ்ஜுக்கான மாதங்களைக் கொள்ள முடியும். பொதுவாக இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் அவற்றை நடைமுறைப்படுத்துவோரின் வசதியைக் கொண்டு கட்டமைக் கப்பட்டவை என்பதை ஹஜ் வணக்கங்களிலும் பரவலாக நோக்க முடியும். (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்!)




# 14 இஹ்ராமில் நுழைவதற்கான (மீகாத்) எல்லைகள்

மேற் கூறப்பட்ட கடமையினை நாம் நிறைவு செய்வதற்காக அல்லாஹ்வின் தூதரால் நமக்கு எல்லைகள் வரையறுக்-கப்பட்டிருக்கின்றன. ஹஜ் அல்லது உம்ராவிற்காக அந்த எல்லைகளைக் கடந்து செல்வோர் இஹ்ராம் அணியாது அந்த எல்லைகளைக் கடந்து செல்லக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு அவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதையும் மீறி ஒருவர் செல்வாராயின் இஹ்ராம் அணிந்து செல்லாத குற்றத்திற்காக அவர் ஃபித்யா– எனப்படும் குற்றப்பரிகாரம்– நிறைவேற்றுவது அவசியமாகும். அவற்றைப் பற்றி பின்னர் கவனிப்போம்.

மதீனா வழியாகச் செல்வோர் “துல்ஹுலைஃபா” விலிருந்தும், எகிப்து, ஜோர்தான் போன்ற நாடுகளில் இருந்து பணயமாகி “ஜித்தா” வழியாகச் செல்வோர் “ஜுஹ்ஃபா” (தற்போதய ராபிஹ்) எல்லையில் இருந்தும், எமன், மற்றும் அதன் வழியாக வருவோர், “எலம்லம்” (தற்போதைய (ஸஃதிய்யா) எல்லையில் இருந்தும் “தாயிஃப்” வழியாக வருவோர் தாயிபிலுள்ள “அஸ்ஸைலுல் க(B)பீர்” என்றழைக்கப்படும் “கர்னுல் மனாஸில்” எல்லையில் இருந்தும் ஈராக்கிலிருந்து வருவோர் “தாது இர்க்” (தற்போதய லரீ (B)பா) எனும் எல்லையில் இருந்தும், “ஹஜ்” அல்லது “உம்ரா”

விற்கான நிய்யத் செய்து "இஹ்ராம்" ஆடை அணிந்து செல்ல வேண்டும். இவை நபிகள் நாயகம் (ﷺ) அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட எல்லை(மீகாத்)களாகும்.

هُنَّ لَهُنَّ، ولِمَن أَتَى عَلَيْهِنَّ مِن غَيْرِهِنَّ مِمَّنْ أرادَ الحَجَّ والعُمْرَةَ، ومَنْ كانَ دُونَ ذَلِكَ ، فَمِن حَيْثُ أَنْشَأ حَتّى أَهْلُ مَكَّةَ مِن مَكَّةَ .

(أخرجه مسلم في الحج باب مواقيت الحج والعمرة)

ஹஜ் அல்லது உம்ராச் செய்ய நாடி அவைகளைக் கடந்தால் அவை அவர்களுக்கான எல்லையாகும். (ஒருவர் இஹ்ராம் அணியாது இவைகளைக் கடக்கக் கூடாது.) எல்லைகளுக்கு உட்பட்டோர் அவர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்தும், மக்காவாசிகள் மக்காவில் இருந்தும் இஹ்ராம் அணிவர் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

### இரு வகையாக நோக்கப்படும் மீகாத் (எல்லைகள்):

ஹஜ் அல்லது உம்றாக் கடமையினை மேற்கொள்ள இரு வகையான மீகாத்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1) மீகாத் ஸமானி (காலம் தொடர்பான மீகாத்கள்):

குறிப்பாக இது ஹஜ் வணக்கம் தொடர்பாக வந்துள்ள மாதங்களைக் குறிக்கும்.

2) மீகாத் மகானி (இடம் சார்ந்த எல்லைகள்):

இது ஹஜ், உம்ரா ஆகிய இரண்டிற்கும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மக்கா ஹரம்ஷரீபையும் அதைத் தொடர்ந்த குறிப்பிட்ட சில இடங்களையும் எல்லைகளாகக் குறிக்கும்.




உலக முஸ்லிம்களின் எல்லையை நிர்ணயம் செய்த பின் அதற்குள் வசிக்கின்ற மக்களின் எல்லை விபரம் பற்றிக் கூறும் போது,

وَمَنْ كَانَ دُوْنَ ذٰلِكَ فَمِنْ حَيْثُ أَنْشَأَ حَتّٰى أَهْلُ مَكَّةَ مِنْ مَكَّةَ (متفق عليه)

"எல்லைகளுக்கு உட்பட்டோர் தாம் இருக்கும் இடத்தில் இருந்தும், மக்காவாசிகள் மக்காவில் இருந்தும் இஹ்ராம் அணிவர் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

மேற் கூறப்பட்ட எல்லைகளுக்குள் வசிப்போர் தமது வதிவிடங்களை எல்லையாக எடுத்துக் கொள்ள வேண்டும். வேறு எல்லைகளுக்குச் சென்று அங்கிருந்து இஹ்ராம் அணிந்து வர வேண்டிய அவசியம் இல்லை என்பதை புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இடம் பெறும் மேற்படி நபிமொழிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு :-**

**"தன்யீம்" எனப்படும் இடம் ஹரம் எல்லைக்கு வெளியில் இருக்கின்றது. அது மக்காவாசிகளின் உம்ரா விற்கான எல்லை என அறிஞர்கள் குறிப்பிடுவதற்கு அமைவாக மக்கா வாசிகளாக இருப்போர் அதனை தமது**

உம்றாவிற்கான எல்லை யாகவும் கொள்ளலாம். ஆனால் அவசியம் கிடையாது. ஏனெனில், அவர் மக்காவில் வசிக்கின்ற இடமே அவருக்குரிய எல்லையாகும் என்பதே மிகச் சரியான கருத்தாகும்.

அதே நேரம் இஹ்ராமுடைய நிலையில் மாதவிடாய் ஏற்பட்டு "தவா.ஃப்" மற்றும் "ஸ.ஃய்" செய்ய மார்க்கத்தில் தடை செய்யப்பட்டிருந்த பெண்கள் குளித்து, தூய்மையாகிய பின்பு தன்யீமில் இப்போதுள்ள "மஸ்ஜித் ஆயிஷா" பள்ளியில் இருந்து தமது விடுபட்ட உம்ராவிற்கான கடமையை முழுமைப் படுத்த இஹ்ராம் அணிவதற்கான கட்டாய எல்லையாகக் கொள்ள வேண்டும்.




அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் நபி (ﷺ) அவர்களுடன் ஹஜ் செய்வதற்காக வந்த போது அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அதற்காக தவா.ஃப் செய்ய முடியாமல் ஹஜ் முடிந்து இந்த இடத்தில் இருந்து விடுபட்ட தவா.ஃபையும், ச.ஃயையும் செய்தார்கள். அதற்காக அந்த இடம் பிற்காலத்தில் 'மஸ்ஜித் ஆயிஷா' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. அதுவே அன்னை ஆயிஷா(رضي الله عنها) பெயரில் அமைக்கப்பட்ட ஆயிஷா மஸ்ஜித் அகும்.



# 16 ஹஜ் மாதங்களில் உம்ரா செய்யலாம்

ஜாஹிலிய்யாக் காலத்தில் பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பது, சகுனம் பார்ப்பது, குறி சொல்வது, மாதத் தீட்டு ஏற்பட்ட பெண்களை சமூகத்தை விட்டும் ஒதுக்கி வைப்பது எனப் பல விதமான மூட நம்பிக்கைகள் இருந்து வந்ததைப் போல் ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்வதை ஜாஹிலிய்யா (அறியாமை)க் கால மக்கள் பூமியில் நிகழும் பெரும் பாவங்களில் ஒன்றாகக்கருதினர். அந்த மூட நம்பிக்கையை இஸ்லாம் தகர்த்தெறிந்து ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்வதை அனுமதித்தது.

முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் தனது வாழ்வில் செய்த உம்ராக்களில் நான்கையும் ஹஜ் மாதங்களில் ஒன்றான துல்–கஃதாவில் செய்தததும் இந்த மூடநம்பிக்கையைத் தகர்த் தெறிவதற்காகத்தான் என அறிஞர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றனர்.

நபித்தோழர்கள் ஹஜ்ஜுக்கான தமது உம்ராவை துல் ஹஜ்ஜில் முடித்ததும் அவர்களிடம் வழமையான சாதாரண நிலைக்கு வாருங்கள், ஆடைகளை மாற்றுங்கள், மனைவிய ரோடு உடலுறவில் ஈடுபட அனுமதி உண்டு என்றெல்லாம் நபி (ﷺ) அவர்கள் பொதுவாக அனுமதித்தார்கள்.

فَتَعَاظَمَ ذٰلِكَ عِنْدَهُمْ فَقَالُوا يَا رَسُولَ اللهِ أَيُّ الْحِلِّ ؟ قَالَ حِلٌّ كُلُّهُ.

(أخرجه البخاري)

ஜாஹிலிய்யாவின் தாக்கத்தில் வளர்ந்த, "நபித்தோழர்களிடம் அது பாரியதொரு பாவமாகத் தென்பட்டது. அதனால் தான் அவர்கள் எந்த அனுமதி? எவ்வாறான அனுமதி? என ஆச்சரியமாகக் கேட்டனர். அதற்கு இறைத்தூதர் அவர்கள் உடலுறவு முதல் அனைத்தும் ஹலால்" என பதில் கூறினார்கள். (நூல்: புகாரி)

ஜாஹிலிய்யா '(அறியாமை)க் கால நம்பிக்கையின் பிரதிபலனாகவே அவர்களிடம் இவ்வாறான ஆச்சரியமான கேள்வி எழுந்திருப்பதையும் அந்த நம்பிக்கையை முறியடிக்கவே இறைத்தூதர் அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள் என்பதையும் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த வழிமுறை ஹாஜிகள் 'தமத்துஃ' முறையில் ஹஜ் செய்வதைச் சிறந்ததாகக் காண்பதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகவும் ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்யலாம் என்ற அனுமதியாகவும் பார்க்கப்படுகின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மட்டுமின்றி, போர் செய்வதற்கு தடை செய்யப்பட்ட புனித முஹர்ரம் மாதத்தின் காலத்தினை அவர்கள் "ஸஃபர்" மாதமாக மாற்றியமைத்து அவர்கள் மாற்றிய அந்த ஸஃபரில் அதாவது உண்மையான முஹர்ரத்தின் புனிதத்தைக் கெடுத்து தாம் விரும்பியதைச் செய்தும் வந்தார்கள். இதுவும் அல்லாஹ் மக்கா காஃபிர்களைக் கண்டித்த அம்சங்களில் ஒன்றாகும். அவர்கள் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக,

إِذَا بَرَا الدَّبَرُ وَعَفَا الْأَثَرُ وَانْسَلَخَ صَفَرُ حَلَّتِ الْعُمْرَةُ لِمَنِ اعْتَمَرَ (متفق عليه)

"(ஒட்டகத்தின்) நோய் நீங்கி, (அதன் மீதுள்ள பயணத்) தடயங்களும் அழிந்து (முஹர்ரம் என்ற) ஸஃபர் மாதமும் கழிந்தால் "உம்ரா" செய்பவரின் உம்ரா செல்லுபடியாகும்" எனக் கூறுவர். (நூல்: முஸ்லிம்).

முஹர்ரம் என்ற ஸஃபர் மாதமாக மாற்றப்பட்ட மாதமும் கழிந்த பின்னால் உம்ராச் செய்பவரின் உம்ராவே செல்லுபடியாகும் என்பதே இதன் பொருளாகும்.

ஹஜ் மாதங்களில் உம்ரா செய்வது பாவம் என்ற கோட்பாடு ஜாஹிலிய்யா (அறியாமை)க்கால மக்களின் நம்பிக்கையே தவிர இஸ்லாமிய மக்களின் நம்பிக்கை அல்ல என்பதை மேற்படி நபிமொழியில் இருந்து விளங்கலாம்.

இந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிவதற்காகவே நபி (ﷺ) அவர்கள் துல்ஹஜ்ஜில் உம்ராச் செய்தார்கள் என்று நாம் முன்னர் சுட்டிக் காட்டி உள்ளோம். புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் பின்வரும் அறிவிப்பில்,

قَدِمَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَصْحَابُهُ صَبِيحَةَ رَابِعَةٍ مُهِلِّينَ بِالْحَجِّ فَأَمَرَهُمْ أَنْ يَجْعَلُوهَا عُمْرَةً (متفق عليه)

“நபிகள் (ﷺ) அவர்களும், அவர்களின் தோழர்களும் ஹஜ்ஜுக்காக துல்ஹஜ் பிறை நான்காவது தினத்தில் (மக்கா) வந்திருந்த போது நபித்தோர்களின் ஹஜ்ஜை தமத்துஃ ஹஜ்ஜுக்கான (உம்ராவாக) மாற்றும்படி நபி (ﷺ) அவர்கள் பணித்தார்கள்.” (பார்க்க: புகாரி, முஸ்லிம்)

அத்துடன், ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்த நபித்தோழர்களை உம்ராவை நிறைவு செய்துவிட்டு தமது இஹ்ராத்தைக் களையும்படியும் பணித்தார்கள். அப்போது,

فَقَامَ سُرَاقَةُ بْنُ مَالِكِ بْنِ جُعْشُمٍ رَضِيَ اللهُ عَنْهُ فَقَالَ يَا رَسُولَ اللهِ أَلِعَامِنَا هٰذَا أَمْ لأَبَدٍ؟ فَشَبَّكَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَصَابِعَهُ وَاحِدَةً فِي الأُخْرَى وَقَالَ «دَخَلَتِ الْعُمْرَةُ فِي الْحَجِّ - مَرَّتَيْنِ - لاَ بَلْ لأَبَدٍ أَبَدٍ»

(أخرجه مسلم)

சுராகா பின் மாலிக் பின் ஜுஃஷும் (رضي الله عنه) அவர்கள் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! இது நமது இவ்வருடத்திற்கு மாத்திரமா? அல்லது எல்லாக் காலத்திற்கும் உரியதா? என வினவிய போது இல்லை இல்லை எல்லாக் காலத்திற்கும் தான் என நபி (ﷺ) அவர்கள் விளக்கி தமது விரல்களை மற்ற விரல்களோடும் இணைத்தவர்களாக,

فقال : دَخَلَتِ الْعُمْرَةُ فِي الْحَجِّ مَرَّتَيْنِ (أخرجه مسلم)

“ஹஜ்ஜுடன் உம்ராவும் சேர்ந்து விட்டது” என (இரு தடவைகள்) கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

அதாவது ஹஜ் மாதத்தில் உம்ரா செய்யப்பட்டு, அதன் பின் ஹஜ் நிறைவேற்றப்படல் வேண்டும் எனப் பணித்த இந்த கட்டளையினைக் கருத்தில் கொள்ளும் அல்பானி போன்ற அறிஞர்கள் தமத்துஃ முறையில் ஹஜ் கடமை நிறைவு செய்வது கடமை என வாதிடுவதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, ஹஜ் செய்வோர் முதலாவதாக உம்ரா செய்து விட்டு, அதன் பின்னர் துல் ஹஜ் எட்டாம் நாள் காலை ஹஜ்ஜுக்கான நிய்யத்துடன் இஹ்ராம் அணிந்து செல்லும் இந்த நடைமுறைதான் இஃப்ராத், மற்றும் கிரான் என்ற அனுமதிக்கப்பட்ட ஹஜ்ஜின் மற்றைய இரு முறைகளை விடவும் மிகவும் ஏற்றமான, சிறந்த நடை முறை என்பதை நபி (ﷺ) அவர்கள் சிறப்பாக்கியுள்ளார்கள் என்பதையும் மேலே உள்ள ஹதீஸ்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். தூரப் பிரதேசங்களிலிருந்து ஹஜ்ஜுக்காகச் செல்வோர் இந்த முறையைத் தேர்வு செய்வதே மிகவும் ஏற்றமானதாகும்.



# 17 ஹஜ்ஜின் வகைகள்

இஸ்லாமிய சட்டங்கள் எளிமையானவை. அனைவராலும் பின்பற்ற சாத்தியமானவை என்பதை இஸ்லாத்தின் சட்டம் தொடர்பான வாசிப்புக்கள் மூலம் உணர முடிகின்றது. அந்த அடிப்படையில் 'ஹஜ்' கடமையும் பல எளிய சட்ட அமைப்புக்களைக் கொண்டது என்பதை ஹஜ்ஜின் வகைகள் உணர்த்துகின்றன.

**حج ஹஜ்**

- **தமத்து.:.** تمتع
- **கிரான்** قران
- **இ.:.ப்ராத்** إفراد

## தமத்து.:. :

ஹஜ்ஜுடைய மாதம் ஒன்றில் எல்லையில் இஹ்ராம் அணியும் ஒருவர் **'அல்லாஹும்ம லெப்பைக்க உம்றதன்'** اَللّٰهُمَّ لَبَّيْكَ عُمْرَةً என்ற தல்பியாவுடன் உம்ராவிற்காக மாத்திரம் மனதால் நிய்யத் செய்து, தவாஃபை முடித்து, பின் "ஸஃய்" (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய கடமைகளை முடித்து தலை

முடியையும் குறைத்து அல்லது முழுமையாக மழித்த பின் இஹ்ராத்தையும் களைந்து, சாதாரண நிலைக்கு வருவதாகும்.

பின்னர் துல்ஹஜ் பிறை எட்டில் ஹஜ்ஜுக்காக மீண்டும் நிய்யத் செய்து, தனது ஹஜ் கடமையை தொடர்ந்து மேற்கொள்ளும் இந்த வழிமுறைக்கு 'ஹஜ் தமத்துஃ' எனக் கூறப்படும்.

ஒருவர் இஹ்ராத்தை களைந்த பின் சுதந்திரமாக தனது இயல்பான நிலையில் செயல்படுவதையும் குடும்ப உறவில் ஈடுபடுவதையும் அனுமதிப்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் "தமத்துஃ" மகிழ்ச்சியாக இருத்தல், இன்பம் அனுபவித்தல் என்ற பொருளில் இச்சொல் இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறினால் 'தமத்துஃ' என்பது 'ஹஜ்' மாதத்தில் ஒருவர் உம்ராவைத் தனித்துச் செய்து, சாதாரண நிலைக்கு வந்து பின், துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள் காலை மீண்டும் ஹஜ்ஜிற்காக நிய்யத் செய்து ஹஜ் கிரியைகளைத் தொடர்தல் எனக் குறிப்பிட முடியும்.

## கிரான்:

எல்லையில் இஹ்ராம் அணியும் ஒருவர் ஹஜ், உம்ரா இரண்டையும் சேர்த்து செய்வதாக நிய்யத் செய்து,

اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا وَ عُمْرَةً

**'அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன் வ உம்றதன்'**

"யா அல்லாஹ்! ஹஜ் மற்றும் உம்ராவை சேர்த்து செய்யப் புறப்படுகின்றேன்" என்ற தல்பியாவைக் கூறி நிய்யத் வைத்து தவாஃபுல் குதூம் செய்வதோடு ஸஃய் (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய இரு வழிமுறைகளையும் முடித்த பின், தலையையும் மழிக்காது, இஹ்ராத்தையும் களையாது தனது

ஹஜ் கடமையைத் தொடர்வதுடன், தொடர்ந்தும் துல்ஹஜ் பிறை பத்திலுள்ள கடமைகளை முடித்த பின்னர் தனது இயல்பான நிலைக்கு வருவதாகும்.

இதில் ஹஜ்ஜும், உம்ராவும் இணைத்துச் செய்யப் படுவதால் இது “**கிரான்**” என அழைக்கப்படுகின்றது.

## இஃப்ராத் :

ஒருவர் ஹஜ்ஜுக்காக மாத்திரம் நிய்யத் செய்து,

اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا

**‘அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன்’**

(யா அல்லாஹ்! ஹஜ்ஜை நிறைவேற்றச் செய்கின்றேன்.)

என தல்பியாக் கூறி மனதால் நிய்யத் செய்து தனது கடமையை ஆரம்பிப்பதாகும்.

தவாஃபுல் குதூம் என்ற ஆரம்ப தவாஃப் மற்றும் ஸஃய் (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய இரு வழிமுறைகளையும் முடித்து, தலையையும் மழிக்காது, இஹ்ராத்தையும் களையாது ஹஜ்ஜுடன் தொடர்பான ஏனைய கடமைகளை மாத்திரம் தனித்துச் செய்வதால் இது “**இஃப்ராத்**” எனக் கூறப்படுகின்றது.

**குறிப்புக்கள்:**

(1) இந்த இரு முறைகளிலும் செய்யப்படுகின்ற முதலாவது ‘தவாஃப்’ ‘தவாஃபுல் குதூம்’ சுன்னத்தான தவாஃபே தவிர கட்டாயக் கடமையான தவாஃப் அல்ல. எனவே, அது விடுபடுவது அவர்கள் மீது குற்றம் இல்லை. அதேவேளை,

والقارن كالمتمتع - الشرح الممتع على زاد المستقنع (٤ : ٣٠٣)

(2) ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து செய்பவர் தமத்துஃ முறையில் ஹஜ் செய்பவர் போன்றவரே" என்ற பொது விதியின் அடிப்படையில் கிரான் முறையில் ஹஜ் செய்தவர் உம்ராவும் செய்வதால் அவர் பலிப்பிராணி கொடுப்பது கடமையாகும். (ஷேக் இப்னு உஸைமீன் (ரஹ்) ஷரஹுல் மும்திஃ)

நபி(ﷺ) அவர்களின் காலத்தில் பலிப் பிராணியைத் தம்முடன் கூடவே எடுத்து வந்தவர்கள் இந்த முறையைப் பேணி இருந்தனர் என்பதை ஹதீஸ்களில் இருந்து விளங்க முடிகின்றது.

(3) ஆனால், 'இஃப்ராத்' முறையில் ஹஜ் செய்பவர் உம்ராச் செய்யாத காரணத்தால் அவர் பலிப்பிராணி கொடுப்பது கடமையில்லை.

பின்வரும் நபி மொழி இவ்வகைகள் பற்றி உறுதி செய்கின்றது.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ خَرَجْنَا مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ : "مَنْ أَرَادَ مِنْكُمْ أَنْ يُهِلَّ بِحَجٍّ وَعُمْرَةٍ فَلْيَفْعَلْ ، وَمَنْ أَرَادَ أَنْ يُهِلَّ بِحَجٍّ فَلْيُهِلَّ ، وَمَنْ أَرَادَ أَنْ يُهِلَّ بِعُمْرَةٍ فَلْيُهِلَّ". (متفق عليه)

நபி (ﷺ) அவர்களுடன் ஹஜ்ஜுக்காக நாம் புறப்பட்டுச் சென்றோம். உங்களில் யார் ஹஜ்ஜுக்காகவும் உம்ராவிற் காகவும் (இஹ்ராம் அணிந்து) தல்பியா கூற விரும்புகிறாரோ அவர் அவ்வாறு செய்து கொள்ளட்டும். அதே நேரம் யார் ஹஜ்ஜுக்காக மாத்திரம் (இஹ்ராம் அணிந்து) தல்பியா கூற விரும்புகின்றாரோ அவரும் அவ்வாறு செய்து கொள்ளவும். உம்ராவிற்காக மாத்திரம் யார் (இஹ்ராம் அணிந்து) தல்பியாக் கூற விரும்புகிறாரோ அவரும் அவ்வாறு செய்து கொள்ளட்டும், என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

## மூன்று முறைகளுக்கும் இடையில் காணப்படும் பிரதான வேறுபாடுகள்:

"கிரான்" முறைப்படி ஹஜ் செய்பவர் ஹஜ்ஜுக்காகவும் உம்ராவிற்காகவும் சேர்த்து நிய்யத் செய்த காரணத்தால் அவர் மக்கா வந்தடைந்ததும் (தவாஃபுல் குதூம்) எனப்படும் சுன்னத்தான முதல் தவாஃப் உடன் செய்த ஸஃய் ஹஜ்ஜுக்கான ஸஃயாகக் கொள்ளப் போதுமானதாகும். இதே வழிமுறையை இஃப்ராத் முறைப்படி ஹஜ் செய்பவரும் கடைப்பிடிப்பார்.

இவ்விருவரும் பிறை பத்தில் ஹஜ்ஜின் பிரதான பர்ளாகக் கணிக்கப்படுகின்ற "தவாஃபுல் இஃபாழா" செய்ய வேண்டும். இந்த நேரத்தில் அவர்கள் ஏற்கனவே ஸஃய் செய்துள்ளதால் தமத்துஃ செய்தவர் ஸஃய் செய்வது போன்று இவர்கள் மீண்டும் ஸஃய் செய்ய வேண்டிய கடமை இல்லை. பிறை பத்தில் செய்யப்படும் இந்தத் தவாஃப் "தவாஃபுல் இஃபாழா" எனப்படும்.

அவர்கள் துல் ஹஜ் பிறை எட்டில் நேரடியாக மினாவிற்கோ அல்லது பிறை ஒன்பதில் அரஃபாவிற்கோ செல்வதனால் தவாஃபுல் குதூம் என்ற சுன்னத்தான ஆரம்ப தவாஃப் இவர்களுக்கு தவறிவிடுமானால் அதில் தவறில்லை.

இதற்கு உர்வா பின் முளர்ரிஸ் (رضي الله عنه) அவர்களின் செய்தியை ஆதாரமாகக் கொள்ளலாம். (பார்க்க: ஷரஹுல் மும்திஃ- ஆசிரியர்: இப்னு உஸைமீன் (ரஹ்) அவர்கள்).

அதே நேரம், "தமத்துஃ" முறையில் "ஹஜ்" செய்தவர் ஆரம்ப தவாஃபும் "ஸஃய்"யும் அவரது உம்ராவிற்கான கடமையான தவாஃபாகவும் ஸஃயாகவும் கொள்ளப்படும். அதனால் அவர் பிறை பத்தில் தவாஃபுல் இஃபாழாவுடன்

மீண்டும் 'ஹஜ்' கடமைக்கான மற்றொரு ஸஃயும் செய்வது பர்ளாகும்.

ஏனெனில், தமத்துஃ முறையில் ஹஜ் செய்கின்ற இவரது உம்ரா மற்றும் ஹஜ் இரு வணக்கங்களும் தனித்தனியே நிறைவேற்றப்படுவது அவசியமானதாகும். அதனால் அதன் கடமைகளும் தனிப்பட்டே நிறைவேற்றப்படல் வேண்டும். மேலும், 'தமத்துஃ' முறையில் ஹஜ் செய்பவர் பலிப்பிராணி கொடுப்பதும் கடமையாகும். அது "ஹத்யு தமத்துஃ" எனக் கூறப்படும்.

அதே போன்று, கிரான் அடிப்படையில் ஹஜ்ஜும் உம்றாவும் செய்தவரும் "ஹத்ய்" என்ற பலிப்பிராணி கொடுப்பதும் கடமையாகும் என்று கிரான் பற்றிய பகுதியில் நாம் முன்னால் சுட்டிக்காட்டியதை நீங்கள் படித்திருப்பீர்கள்.

**குறிப்பு:**

**உலக நாடுகளில் இருந்து ஹஜ்ஜுக்காக வருவோர் 'தமத்து.:' முறையை அதிகம் பேணுவர். அதுவே அவர்களுக்கு எளிய மற்றும் சிறந்த முறையுமாகும். அதனால் அது பற்றி பின்னால் விரிவாக தரப்படுகின்றது.**



# 18 இஹ்ராம் அணிவதற்கு முன் செய்ய வேண்டிய காரியங்கள்

**குளிப்பு:**

மாதத்தீட்டு, பிரசவத் தீட்டு போன்ற உபாதைகளால் குளிப்பு கடமையான பெண்கள் தமது உபாதைகள் முடிந்து குளிப்பது போன்று உடலுறவு, உறக்கம் போன்றவற்றால் குளிப்புக் கடமையான ஆண், பெண் அனைவரும் குளிப்பது கடமையாகும். ஆனால், குளிப்புக் கடமையில்லாத மற்றவர்கள் விரும்பினால் குளிக்கலாம். விரும்பாவிட்டால் குளிக்காது விட்டும் விடலாம்.

மாதத்தீட்டு, பிரசவத் தீட்டு ஏற்பட்ட இரு பெண்களும் 'மீகாத்' எல்லையை வந்தடைந்தால் அவ்விருவரும் குளித்து இஹ்ராம் அணிந்து ஹஜ், உம்றாவின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றலாம். தவாப் செய்வது கூடாது.

மாதத்தீட்டுடன் இருக்கும் பெண்கள் இஹ்ராம் அணிந்து மக்கா செல்வது மார்க்கத்தில் தடையில்லை. ஆனால், அவர்கள் தவாஃப் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உபாதைகளின் போது தடுக்கப்பட்டவைகள் போக ஹஜ், உம்றா தொடர்பான ஏனைய கிரியைகளை மற்றவர்கள் போன்று செய்து கொள்ளலாம். இது பெண்கள் தீண்டத் தகாதவர்கள் என்பதைத் தகர்க்கும் மிகப்பெரும் வழிகாட்டலாகும்.



# 19 மனதால் நிய்யத் செய்து தல்பியாவுடன் இஹ்ராத்தில் நுழைதல்

இஸ்லாத்தின் சகல அமல்களுக்கும் உள்ளத்துடன் தொடர்பு இருப்பது போன்று ஹஜ், உம்ராவிற்கும் தொடர்பு இருக்கிறது.

அந்த அடிப்படையில் ஹாஜி ஒருவர் தனது எல்லையை அடைந்ததும் உம்ராவிற்கான எண்ணத்தை மனதில் இருத்தி,

اَللّٰهُمَّ لَبَّيْكَ عُمْرَةً

**“அல்லாஹும்ம லெப்பை(க்)க உம்ரதன்”**

“அல்லாஹ்வே! உனக்காக உம்ராவை நிறைவேற்ற தயாராகின்றேன்” என்ற வார்த்தையை நாவால் வெளிப்படையாகக் கூறிக் கொள்ளல்.

இது தல்பியாவைக் கொண்டு ஆரம்பித்தலே தவிர சப்தமிட்டு நிய்யத் சொல்வது கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிய்யத் என்பது வாயால் மொழிவதல்ல. மாற்றமாக, மனதால் நினைப்பதாகும்.



# 20 பயணம் தடைப்படுவதை அஞ்சினால்

உம்ராப் பயணம் செல்லும் போது சில தடங்கல்கள் ஏற்பட்டு, அதனால் ஹஜ், உம்ராவை நிறைவு செய்ய முடியாது போகும் என்ற அச்ச நிலை ஏற்படுவதை ஒருவர் அஞ்சினால் அவர் உம்ராவிற்கான நிய்யத் செய்யும் போது

اَللّٰهُمَّ إِنْ حَبَسَنِيْ حَابِسٌ فَمَحِلِّي حَيْثُ حَبَسْتَنِي (أخرجه البخاري ومسلم)

**"அல்லாஹும்ம இன்ஹ(B)பஸனீ ஹா(B)பிஸுன் (F)ஃப மஹல்லீ ஹைஸு ஹ (B)பஸ்தனீ**

**பொருள்:**

"அல்லாஹ்வே! தடங்கள் ஏற்படுத்தக் கூடியது ஏதாவது என்னைத் தடுத்துவிட்டால் நீ என்னைத் தடுத்த அந்த இடமே எனது (இஹ்ராத்தைக் களையும்) இடமாகும். (புகாரி, முஸ்லிம்) என மனதால் நினைத்துக் கொள்ளுதல்.

**இவ்வாறு செய்வதால் ஏற்படும் சாதக பாதகம் என்ன?:**

இவ்வாறு நிய்யத் செய்து போகும் ஒருவருக்கு ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவு செய்ய முடியாதவாறு வழியில் நோய், பாதைப் பிரச்சினை, பயங்கரவாதப் பிரச்சினைகள் போன்ற ஏதாவது தடங்கல்கள் ஏற்படுகின்ற போது அவர் குறித்த ஸ்தலத்திலேயே முடியை மழித்து அல்லது குறைத்துக் கொண்டு இஹ்ராத்தில் இருந்து விடுதலையாகலாம்.

இந்நிலையில் அவர் இஹ்ராத்தை இடை நடுவில் களைந்த குற்றப் பரிகாரமாக கொடுக்கப்படும் "ஹத்ய்" எனப்படும் பலிப் பிராணியைக் கொடுக்க வேண்டிய கடமையில்லை.

அவ்வாறு கூறாத ஒருவருக்கு தடங்கல் ஏற்பட்டு, இஹ்ராத்தை களைய வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டால் அவர் நபி (ﷺ) அவர்களும் நபித்தோழர்களும் "ஹுதைபியா" உடன்படிக்கை ஆண்டில் பலிப்பிராணியை கொடுத்து, தமது தலை முடிகளை மழித்து, பின் இஹ்ராத்தை களைந்தது போன்று செய்ய வேண்டும்.

மார்க்க விவகாரத்தில் அல்லாஹ் கற்றுக் கொடுத்த-தைத் தவிர மற்றவை பற்றி அறியாதவராக வாழ்ந்த இறைத்தூதர் அவர்களுக்கு இந்த விடயத்தில் மறைவான அறிவில்லாத காரணத்தினால் இவ்வாறு நிய்யத் செய்யாமல் தனது தோழர்களோடு உம்ராவுக்குச் சென்ற போது மக்கா காஃபிர்களால் ஹுதைபியாவில் இடை மறிக்கப்பட்டார்கள். இறுதியில் தனது தோழர்களிடம்

قُومُوا فَانْحَرُوا ثُمَّ احْلِقُوا (أخرجه البخاري ٢٥٢٩)

"எழுந்து, உங்கள் பலிப்பிராணிகளை அறுங்கள், பின்னர் உங்கள் (தலை) முடிகளை மழித்துக் கொள்ளுங்கள் எனக் கட்டளையிட்டார்கள். பின்னர் வந்த அடுத்த ஆண்டு விடுபட்ட தமது உம்ராவைக் கழாச் செய்தார்கள்." (நூல்: புகாரி)

எனவே, நாமும் இவ்வாறு விடுபடும் உம்றாக்களை அவ்வாறே நாம் கழா செய்யவும் வேண்டும். இருந்தும் நோய், பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த உம்றாக் கடமையை நிறைவு செய்ய முடியாது போனால் அவர் மீது குற்றமில்லை.



# 21 மாதவிடாய், பிரசவம் ஏற்பட்ட பெண்களின் இஹ்ராம் செல்லுபடியானதாகும்

மகப்பேறு அல்லது பிரசவத்திற்குப் பிறகு பெண்கள் இஹ்ராம் அணிந்து தல்பியாக் கூறுவதோ அல்லது மாதவிடாயோடு இருக்கும் நிலையில் இஹ்ராம் அணிந்து தல்பியாக் கூறுவதோ மார்க்கம் அனுமதித்த காரியமாகும்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ نُفِسَتْ أَسْمَاءُ بِنْتُ عُمَيْسٍ بِمُحَمَّدِ بْنِ أَبِي بَكْرٍ بِالشَّجَرَةِ فَأَمَرَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَبَا بَكْرٍ يَأْمُرُهَا أَنْ تَغْتَسِلَ وَتُهِلَّ (أخرجه مسلم)

அபூபக்கர் (ﭬ) அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ﭬ) அவர்கள் (துல்குலைஃபா) மரத்தடியில் முஹம்மத் பின் அபூபக்ரைப் பிரசவித்த போது அது பற்றிய மார்க்க சட்டம் பற்றி இறைத்தூதரிடம் வினவியதும் அவரைக் குளித்து, பின்பு தல்பியாக் கூறிக் கொள்ளும்படி நபி (ﷺ) அவர்கள் அபூபக்கர் (ﭬ) அவர்களிடம் கட்டளையிட்டிருந்தார்கள். (நூல்: முஸ்லிம்) இது கியாஸின் அடிப்படையில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுக்கும் பொருந்தும் சட்டமாகும்.

இது பற்றி விளக்குகின்ற இமாம் நவவி (ரஹ்) அவர்கள் :

وَفِيهِ : صِحَّة إِحْرَام النُّفَسَاء وَالْحَائِض ، وَاسْتِحْبَاب اِغْتِسَالهمَا لِلْإِحْرَامِ ، وَهُوَ مُجْمَع عَلَى الْأَمْر بِهِ (شرح النووي على مسلم)

“பிரசவத் தீட்டு ஏற்பட்ட பெண்கள், மாதவிடாய்ப் பெண்கள் ஆகியோரின் இஹ்ராம் செல்லுபடியானதாகும் என்பதும், அவ்விருவரும் இஹ்ராத்திற்காக குளித்துக் கொள்வது சுன்னத் என்பதும் இந்த ஹதீஸில் உள்ளடங்கி இருக்கின்றது. இதில் அறிஞர்கள் ஒருமித்த கருத்தில் உள்ளனர் என்றும் சுட்டிக் காட்டுவதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இமாம் முஸ்லிமின் ஹதீஸ் கிரந்த விரிவுரையில், ‘மாதத் தீட்டு ஏற்பட்ட பெண்கள், பிரசவத் தீட்டு ஏற்பட்ட பெண்கள் ஆகியோர் எவ்வாறு இஹ்ராத்தில் நுழைய வேண்டும்’ என்ற அவர்களின் பாடத்தலைப்பினூடாகவும் இதன் விபரம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் இஹ்ராம் அணிந்து ஹஜ், உம்ராவிற்காகச் செல்ல முடியும் என்பதை புகாரியில் இடம் பெறும் பின்வரும் மற்றொரு நிகழ்வினூடாக உறுதி கொள்ள முடிகின்றது.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ دَخَلَ عَلَيْهَا وَحَاضَتْ بِسَرِفَ قَبْلَ أَنْ تَدْخُلَ مَكَّةَ وَهِيَ تَبْكِي ، فَقَالَ مَا لَكِ أَنَفِسْتِ؟ قَالَتْ نَعَمْ ، قَالَ : "إِنَّ هَذَا أَمْرٌ كَتَبَهُ اللهُ عَلَى بَنَاتِ آدَمَ فَاقْضِي مَا يَقْضِي الْحَاجُّ غَيْرَ أَنْ لَا تَطُوفِي بِالْبَيْتِ (أخرجه البخاري)

ஸரிஃப் என்ற இடத்தை (தற்போதைய மக்காவின் நவாரிய்யாவை) அடைந்த போது மக்காவிற்குள் நுழையும் முன்னதாக அன்னை ஆயிஷா (﵂) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அழுதவர்களாக நபி (ﷺ) அவர்களிடம் வந்தார்கள். உனக்கு என்ன நேர்ந்தது? உனக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதா? எனக் கேட்டார்கள். அவர்கள் ஆம் என்றதும்,

இது அல்லாஹ் ஆதம் நபியின் பெண் பிள்ளைகள் மீது விதித்ததாச்சே! எனக் கூறிவிட்டு ஹாஜிகள் செய்கின்ற அனைத்தையும் நீ செய்து கொள். ஆனால் காஃபாவை தவாஃப் செய்யாதே எனக் கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்) புகாரியின் மற்றொரு அறிவிப்பில்: நீ பரிசுத்தமாகின்ற வரை என இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் குளிப்புக் கடமையான நிலையில் ஒருவர் இஹ்ராம் அணிந்து செல்வது ஆகுமானது என்பதைக் காட்டுகின்றது.

இருப்பினும் மாதவிடாய் மற்றும் பிரசவத்தீட்டு போன்ற உபாதைகளுக்குள்ளான பெண்கள் சுத்தம் இல்லாத காரணத்தால் கஃபாவை தவாஃப் செய்யலாகாது. ஸஃய் செய்யலாம். இருப்பினும் அந்த ஸஃயை விடுபட்ட தவாஃபுடன் செய்து கொள்வது ஏற்றமானதாகும்.

அவ்வாறுதான் இஹ்ராம் அணிந்த நிலையில் ஒருவருக்கு ஸ்கலிதமாகி குளிப்புக் கடமையானாலும் அவர் குளித்து சுத்தமாக வேண்டும். தண்ணீர் இல்லாத போது தயம்மும் செய்து கொள்ள வேண்டும். நோன்பு வைத்த நிலையில் குளிப்புக் கடமையானால் எவ்வாறு குளித்து சுத்தமாகி நோன்பைத் தொடர்வோமோ அதே போன்று இஹ்ராத்தைத் தொடர வேண்டும்.

**இஹ்ராத்திற்கென விஷேடமான சுன்னத் தொழுகை இல்லை:**

இஹ்ராத்திற்கென ஒரு தொழுகையை நபி (ﷺ) அவர்கள் அறிமுகம் செய்யவில்லை என்பதாலும், ஒரு வணக்கத்தை நாமாக கண்டு பிடிக்க முடியாது என்பதாலும் இஹ்ராத்திற்கென விஷேட தொழுகை ஏதும் இல்லை என்பதாலும் இஹ்ராத்திற்கென ஒரு தொழுகையைத் தொழக் கூடாது என்ற கருத்தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.



# 22

# மதீனாவின் எல்லை வழியாகச் செல்வோர் கவனிக்க வேண்டியது

மதீனாவின் மீகாத் எல்லையான "துல்ஹுலைஃபா" பள்ளிவாசல் "வாதில் அகீக்" எனும் புனித பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

ஹஜ் அல்லது உம்ராவிற்காக அந்த எல்லையைக் கடந்து செல்வோர் அதில் இரண்டு ரகஅத்துக்கள் தொழுவது கடமையான ஒரு அமல் என்பது தனியான பிரத்தியேக வழிகாட்டலாக இருக்கின்றது. அது பின்வரும் ஹதீஸ் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ عَنْ عُمَرَ ، رَضِيَ اللهُ عَنْهُمْ ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : اللَّيْلَةَ أَتَانِي آتٍ مِنْ رَبِّي وَهُوَ بِالْعَقِيقِ أَنْ صَلِّ فِي هٰذَا الْوَادِي الْمُبَارَكِ وَقُلْ عُمْرَةٌ فِي حَجَّةٍ. (أخرجه البخاري)

"இன்றிரவு கனவில் எனது இரட்சகனிடம் இருந்து வரக்கூடியவர் (ஜிப்ரீல் (عليه السلام) அவர்கள் என்னிடம் தோன்றி "இந்தப் புனித பள்ளத்தாக்கில் தொழுவீராக" மேலும், ஹஜ்ஜுடன் உம்ரா செய்ய நாடுகின்றேன் என்றும் கூறுவீராக! எனக் கூறினார்" என்பதாக நபி (ﷺ) அவர்கள் நபித்தோழர் களிடம் கூறினார்கள். (நூல்: புகாரி)